எப்பொழுதும் பாவியுங்கள்
ராஜ பீடி ஸ்பெஷல்




ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14.

Registered as a Newspaper in Ceylon ★ ★ ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தசியதினசரி National Tamil Daily
மலர் 8 1-11-66 இதழ் 262

பராபவ ஐப்பசி 16 ஐப்பசி 17 செவ்வாய்க்கிழமை

எப்பொழுதும் பாவியுங்கள்




ராஜ பீடி ஸ்பெஷல்
ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14

# இன்று வர்த்தக ஊழியர் வேலைநிறுத்தம்

## பிரதமர் யோசனையை யூனியன் நிராகரித்தது

கொழும்பு, செவ்வாய்

இலங்கை வர்த்தகஊழியர் சங்கத்தைச் சேர்ந்த (தனியார்துறையில் வேலைபார்க்கும்) சுமார் பத்தாயிரம் ஊழியர்கள் இன்று வேலைநிறுத்தம் ஆரம்பிப்பார்கள். முதலாளிமார் சம்மேளனத்தைச் சேராத சுமார் பதினோராயிரம் (வர்த்தக ஊழியர் சங்க) ஊழியர்கள் தயார்நிலையில் உள்ளனர் என்றும் நிலைமையைப் பொறுத்து அவர்களும் வேலைநிறுத்தத்தில் இறங்குவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று ஆரம்பமாகும் வேலைநிறுத்தத்தை முன்னிட்டு அரசாங்கம் சகல பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுத்துள்ளது.

நவம்பர் முதல்திகதிவேலைநிறுத்தம் ஆரம்பிப்பதாகச் செய்த முடிவை மாற்றி வேலைநிறுத்தயோசனையைப் பின்போடுமாறு பிரதமர் விடுத்த வேண்டுகோளை, 'போதிய அவகாசம் இல்லை' என்று தெரிவித்து இலங்கை வர்த்தக சிப்பந்திகள்சங்கம் நிராகரித்து விட்டது சங்கத்தின்பொதுச்சபைசெய்த தீர்மானத்திற்கிணங்க திட்டமிட்டபடி தனியார் துறையைச் சேர்ந்த வர்த்தக ஊழியர்சங்க அங்கத்தவர்களில் சுமார்பத்தாயிரம் பேர் இன்று செவ்வாய்க்கிழமை வேலைநிறுத்தம் ஆரம்பிப்பர்.

வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டாலும் சமரசப் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடக்கலாமென யூனியன் தெரிவித்தது.

இதேசமயம் வேலைநிறுத்தத்தை தவிர்ப்பதற்கு இறுதிநேர முயற்சிகளிலீடுபட முதலாளிமார் சம்மேளனம் ஆலோசனை செய்து வருகிறது.

திருமணமான ஊழியர்களுக்கும் திருமணமாகாத ஊழியருக்கும் வேதன விகிதத்தில் வேறுபாடு இருக்கக் கூடாதுஎன்ற அம்சத்திலும் புதிய உடன்பாடு இவ்வாண்டு ஜூன்மாதம் முதல் திகதி தொடக்கம் அமுலுக்கு வந்ததாகக் கருதப்பட வேண்டுமென்ற அம்சத்திலும் குறைந்த பட்ச சம்பளத்திட்டத்தின்கீழ் எவருக்கும் சம்பளம் இருக்கக் கூடாதென்ற அம்சத்திலும் எவ்விதமாறுதலும் இருக்கக் கூடாதென்றும் இதைத் தவிர பேச்சு வார்த்தைக்கு இடமுண்டு என்றும் யூனியன் தெரிவித்துள்ளது.

## திரு. வல்பிற்ற இன்று பதவியேற்பார்

கொழும்பு, திங்கள்

இலங்கைப் பல்கலைக் கழக உப அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ள திரு. எஸ். ஜே. வல்பிற்ற நாளை முதல் திகதி பதவியேற்கவிருக்கிறார். இதற்கு முன்னோடியாக தற்பொழுது கைத்தொழில் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாக இருக்கும் அவர் தமது நிரந்தரக் காரியதரிசி பதவியிலிருந்து ஓய்வுபெறுவதற்கான பத்திரங்களை சமர்ப்பித்திருக்கிறார்.

திரு. வல்பிற்ற உபஅத்தியட்சகராக நியமிக்கப்பட்டிருப்பதற்கு பல்கலைக் கழக பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர். ஆனால் இந்த நியமனத்தில் எவ்வித மாற்றமும் செய்ய முடியாதென கல்வி அமைச்சர் இரியகொல்லை கூறியிருக்கிறார்.

## மந்திரிசபையில் மாற்றமில்லை

கொழும்பு, திங்கள்

இன்று மந்திரிசபை கூட்டம் பிரதமர் திரு. டட்லி தலைமையில் கூடியபோது மந்திரிசபையில் எதுவித மாற்றமும் செய்வதில்லையென பிரதமர் தெரிவித்தார்.

சமீபத்தில் நடைபெற்ற இடைத்தேர்தல் முடிவு களைபற்றி பரிசிலனை செய்யப்பட்டபோது இந்த முடிவுகளுக்குஎந்தஒருதனிப்பட்ட மந்திரியும் பொறுப்பு எனக் கூறிவிட முடியாது என பிரதமர் தெரிவித்ததாகவும் இதனை முன்னிட்டே மந்திரிசபையில் எதுவிதமாற்றமும் செய்வதில்லையென முடிவு செய்யப்பட்டதாக அறியப்படுகிறது.

சிலஅமைச்சைச் சேர்ந்த இலாகாக்களின் தலைவர்கள் மாற்றம்செய்யப்பட இருப்பதாகமந்திரிசபைக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

## ஆசிரியர் பிரச்னையை சுலபமாக தீர்க்க உபகுழு நியமனம்

யாழ்ப்பாணம், செவ்.

தனிப்பட்டமுறையில் கல்வி கற்றோர் மூலம் தீர்த்துக் கொள்ள முடியாத ஆசிரியர்கள் பிரச்னையை, சுலபமாகத் தீர்த்துக்கொள்வதற்காக ஐந்து ஆசிரியர்களைக்கொண்ட உபகுழுஒன்று நியமிக்கப்பட்டுள்ளது

அகில இலங்கை ஆசிரியர் பாடசாலைத் தமிழாசிரியர் சங்க வடபிரதேசக் கிளையின் இணைப்புச்சபை, இந்த உபகுழுவைத் தெரிவு செய்துள்ளது. இக்குழுவில் தாய்ச்சங்கத் தலைவர் திரு. த. ச. சண்முகதாசன், காரியதரிசி திரு. அ. பொன்னம்பலம், வடபிரதேசத் தலைவர் திரு. ஐ. ஆ. இராமசுவாமி, வட பிரதேச காரியதரிசி திரு. வ. மகாலிங்கம், தென்மராட்சிக் கிளைக்காரியதரிசி திரு செ. சிவப்பிரகாசம் ஆகியோர் உள்ளனர். உபகுழுவின் காரியதரிசியாக திரு. எச். சிவப்பிரகாசம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

செனட் சபை

## மந்திரி திருச்செல்வத்திடம் செனட்டர்கள் கேள்வி

கொழும்பு, திங்கள்

இன்று நடைபெற்ற செனட்சபைக் கூட்டத்தில் இரு எதிர்க்கட்சி செனட்டர்கள் கொண்டுவந்த ஒத்திவைப்புப் பிரேரணைகளுக்கு பதிலளிக்க செனட்டர் எம். திருச்செல்வம் மறுத்துவிட்டார்.

"சமஷ்டி மூலம் தான் ஐக்கியத்தை ஏற்படுத்த முடியுமென்று மந்திரி திருச்செல்வம் தெரிவித்திருந்ததாக ஒரு ஆங்கிலத் தினசரியில் செய்தியொன்று வெளியாகி இருந்ததென்றும், இது உண்மைதானா என்றும் செனட்டர் ஏ. ஆர் எம். ஹமீம் கேட்ட கேள்விக்கு மந்திரி திருச்செல்வம் பதிலளிக்க மறுத்துவிட்டார்.

இதன் பின்னர் செனட்டர் ரெஜி பெரேரா கேட்ட கேள்வியில், ஐக்கிய தேசியக் கட்சிக்கும், தமிழரசுக் கட்சிக்குமிடையே ஒப்பந்தமொன்று இருப்பதாகத் தாம் முன்னரே மந்திரி திருச்செல்வத்திடம் கேட்டதாகவும், அதற்கு அக்டோபர் 24ந் தேதி பதிலளிப்பதாக மந்திரி தெரிவித்திருந்தாரென்றும், குறிப்பிட்ட தேதி கடந்துவிட்டதால் மந்திரி திருச்செல்வம் இப்பொழுது தமது கேள்விக்குப் பதிலளிக்கவேண்டுமென்றும் கோரினார்.

இதற்கும் மந்திரி திருச்செல்வம் பதிலளிக்கவில்லை.

## நாளை அத்தனகல தேர்தல் தீர்ப்பு

கொழும்பு, செவ்வாய்

அத்தனகல தேர்தல் ஆட்சேப வழக்கின் தீர்ப்பு தேர்தல் நீதவான் திரு. சிறிமானன்னால் நாளை காலை 11 மணிக்கு வழங்கப்படும்.

மார்ச் 1965-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் அத்தனகல தொகுதிக்குத் தெரிவுசெய்யப்பட்ட திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் தெரிவை ஆட்சேபித்து திருவாளர்கள் ஜி. ஏ சேகரா பெரேரா, ஆர். ஏ ஜயரத்ன ஆகியோர் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.

## 'சுபந்திரியோவைக் காப்பாற்றுக'

கொழும்பு, திங்கள்

இந்தோனேஷிய முன்னாள் வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோவுக்கு வழங்கப்பட்டுள்ள மரண தண்டனையைத் தடுத்துநிறுத்துமாறு கோரி, இலங்கை ஆபிரிக்க—ஆசிய கூட்டுறவுச் சங்கம் இந்தோனேஷிய ஜனாதிபதி சுகர்ணோவுக்கு விண்ணப்பம் அனுப்பியுள்ளது

யாழ்ப்பாண
ஐக்கிய வியாபாரச் சங்கம்
மொத்த விற்பனை நிலையம்
287 ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.
★
கண்களைக் கவரும் பலமாதிரி C. W. E. புடவைகள்
தற்போது வந்திருக்கிறது. வாங்க விரும்பும் வர்த்தகர்கள்
தாமதமில்லாது எங்கள் விற்பனை நிலையத்துக்கு
விஜயம் செய்யுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

**கடையும், காணியும்**

51, மணிக்கூட்டு வீதியில் ஒரு கடையும், ஒரு கடை கட்டக்கூடிய இடமும் விற்பனைக்கு இருக்கிறது. தொடர்புகொள்ளவும். A. K. முருகேசு, 51, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 1149

**தென்னந்தோட்டம்**

எழுதுமட்டுவாளில் ஓர் நல்ல முறையிலிருக்கும் 20 ஏக்கர் கொண்ட தென்னந்தோட்டம் போக்குவரவுக்கு சகல வசதிகளுமுடையது. விற்பனைக்குண்டு விபரங்கட்கு விளம்பர இல 1457 மே/பா என எழுதித் மூலம் விண்ணப்பிக்கவும். 1457

**வீடுவளவு**

நவாலி அரசினர் மகா வித்தியாலயத்திற்கு முன் 8 3/4 பரப்புக் காணியும் நாற்சார் வீடும் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு நேரில் தொடர்புகொள்ளவும். செ. கனகசபை, நவாலி தெற்கு, மானிப்பாய். 1465

## தேவை

**வேலையாள்**

மின்சார ஒட்டுவேலை, காஸ் ஒட்டு வேலை, கேத்திறிங் வேலைகளில் மிகச் சிறந்த அனுபவம் உள்ள ஒரு வேலையாள் தேவை. நல்ல ஊதியம் கொடுக்கப்படும். 4-11-66 காலை 9 மணியளவில் நேரில் விண்ணப்பிக்கவும். மனேஜிங் டைரக்டர், நெல்லியடி இன்டஸ்றியல் வேக்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 1464

## வடகைக்கு

**கடை**

யாழ்ப்பாண ஆஸ்பத்திரி பஸ் நிலைய மத்தியில் கடை வாடகைக்குண்டு. விபரங்களுக்கு விளம்பர இல,1463, ஈழநாடு மே/பா என எழுதி மூலம் விண்ணப்பிக்கவும். 1463

## வைத்தியம்

தொய்வு, க்ஷயம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றறிக்கை இலவசம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் வி. பூரணானந்தர் J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## விதியின் சதி!

உடுப்பிட்டி, திங்.

திருமண நன்னாளை ஆவலோடு எதிர் பார்த்திருந்த இளைஞர் ஒருவர் காலனினால் கவரப்பட்டார்.

கரவெட்டி கிழக்கு சினியர் வளவு என்னுமிடத்தில் இருக்கும் வீரகத்தி தியாகராசா என்னும் இளைஞரே இப்பரிதாப சம்பவத்துக்குள்ளானார். இவருக்கு வயது 26. இவருக்கு திருமணப்பதிவு நடைபெற்ற விரைவில் திருமண வைபவம் நடைபெறவிருந்தது. தியாகராசா இருதயநோய் காரணமாக யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு வீட்டுக்குக் கொண்டு வந்த பின்னர் மரணத்துக்குள்ளானார்.


## 5வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொட்டாஞ்சேனை)
விஜிதா (மாத்தளை) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை)
மொடோர்ன் (பண்டாரவளை) வெலிங்டன் (காத்தான்குடி)
தீபவொளி (நுவரெலியா) கல்யாணி (நாவலப்பிட்டி)



எம். ஜி. ஆர்., கே. ஆர். விஜயா
சௌகார் ஜானகி, நாகேஷ், பாலையா
மற்றும் பலர் நடிக்கும்
ஆர். ஆர். பிக்சர்ஸ்
பணம் படைத்தவன்


## பதவி உயர்வுடன் வந்துள்ளார்

சங்கானை, திங்.

சங்கானை பொலிஸ் நிலைய உதவி இன்ஸ்பெக்டர் திரு. சி. டி. மென்டிஸ் களுத்துறை பொலிஸ் பயிற்சிப்பாடசாலையில் பயிற்சிமுடிந்து இன்ஸ்பெக்டராகப்பதவி உயர்வு பெற்றுத் திரும்பவும் சங்கானைப் பொலிஸ் நிலையத்திற்கு பொறுப்பதிகாரியாகப்பதவி ஏற்றுள்ளார். இவர் பயிற்சிக்குச் செல்லும் போது இந்நிலைய அதிகாரியாகக்கடமையாற்றிய உதவி இன்ஸ்பெக்டர் திரு. வி. செல்லையா திரும்பவும் காங்கேசன்துறைக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார்.

## கண்டியில் மங்கையர் கழகம்

கண்டி, திங்கள்

சமுதாய வளர்ச்சிக்குத் தாய்க்குலமே தனியுரிமையுடையது என்று டாக்டர் சரோஜினி ராமானுஜம் கண்டி சைவமகாசபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில்பேசுகையில் கூறினார்.

கலாநிதி க. வித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மத்திய மாகாணச் சைவமகாசபையின் கிளையாக மங்கையர் கழகம் நிறுவுவதுபற்றி ஆராயப்பட்டு நிறுவுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

மற்றும் பலரும் பேசினர்.

## தற்கொலை

கண்டி, திங்கள்

கண்டிலேக்கில் ஒருவர் விழுந்து தற்கொலை செய்து கொண்டார். வீதியில் நடந்து கொண்டு வந்தவர் திடீரென லேக்கிற்குள் பாய்ந்து விட்டாராம். அங்கே கடலைவிற்கும் பெண் ஒருத்தி இதைக்கண்டு சத்தம்போட சிலர் ஓடிவந்து படகில் உதவிபுரிய வந்ததாகவும், அதற்குள் அந்நபர் கீழே தாழ்ந்துவிட்டாரெனவும் பின் அடுத்த நாள் பொலிசாரின் உதவியுடன் பிரேதம் வெளியே எடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. தற்கொலை என தீர்ப்பு வழங்கப்பட்டது.


**மகாத்மா தியேட்டர்**
(நெல்லியடி)
தினசரி 6-30, 9-30
போயா தினங்களில் காலை 10 மணி
சிவாஜி—சாவித்திரி நடித்த
**திருவிளையாடல்**
பிரதமரின் யாழ்ப்பாண விஜயமும் காண்பிக்கப்படும்

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
**BLACK WIDOW**
(Republic Serial)

**நியூ காலிங்கன்**
(சுண்ணாகம்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
ஜெமினி — சாவித்திரி நடித்த
**ராசி**

**REGAL—JAFFNA**
NOW SHOWING
Joanne Woodward
Richard Beymer
in
**THE STRIPPER**
(Adults Only)


# விளம்பரம்

## வீடு அமைப்பதற்கு கேள்விப்பத்திரங்கள்

கம்பி வலை ஆதாரம் உள்ள சிமெந்து (Reinforced Concrete) மாடி வீடு (Flats) யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் அமைப்பதற்கு, கூலிகளும் தொழிலாளர்களும் தரக்கூடிய ஒப்பந்தக் காரர்களிடம் இருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. இப்படியான கட்டட அமைப்பில் பழைய அனுபவமுள்ளவர்களும், குறைந்தது ரூ. 60,000 வரை கட்டட வேலை ஒப்பந்தங்களை மேற்கொண்டவர்களும் மட்டுமே கேள்விப் பத்திரங்கள் அனுப்பலாம். சமீபகாலத்தில் நிறைவேற்றிய தொழில் விபரங்களுடன் 10-11-66-க்கு முன்னர் கீழ்க்காணும் விலாசத்துக்கு மேலதிக விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

### கட்டடப் பொருட்கள் வழங்குவதற்கு கேள்விப்பத்திரங்கள்

அவ்வப்போது கட்டட தேவைக்கு ஏற்ற மாதிரி, கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொண்ட திகதியிலிருந்து ஐந்து மாதங்களுக்குள் பின் வரும் பொருட்கள் முழுவதையும் வழங்கக் கூடியவர்களிடம் இருந்து வெவ்வேறாக கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1. 100 கியூப் ¾'' அடிகல்.
2. 10 ,, 2'' கல்.
3. 50 ,, கண்டாவளை மணல்.
4. 50 ,, மண்கும்பான் மணல்.

விளம்பர இல: 1355, 'ஈழநாடு' மே/பா என எழுதிமூலம் விண்ணப்பிக்கவும். 1355

## ஊர்காவற்றுறைப் பட்டினசபை ஏலவிளம்பரம்

ஊர்காவற்றுறைப் பட்டினசபைக்குரியமீன்சந்தை, காய்கறிச்சந்தை மற்றும் இறைச்சிக்கடைகள் முதலியன 1967-ம் ஆண்டு குத்தகைக்குக் கொடுப்பதற்கு 15—11—66 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு இப்பட்டினசபைக் காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. காய்கறிச்சந்தை
2. மீன்சந்தை
3. 1-ம் இலக்க ஆட்டிறைச்சிக்கடை
4. 1-ம், 2-ம், 3-ம் இலக்க மாட்டிறைச்சிக்கடைகள்
5. 1-ம், 2-ம், 3-ம் இலக்க பலசரக்குக் கடைகள்
6. 1-7-66 தொடக்கம் 30-6-67 வரை சேர்க்கப்படும் குப்பை
7. நாரந்தனை காணி மேய்ச்சல் நிலம்

ச. ம. அல்பிறெட்
தலைவர்
பட்டினசபை,
ஊர்காவற்றுறை.
பட்டினசபைக் காரியாலயம்
ஊர்காவற்றுறை.
30—10—66. 1358

## அடைவுநகை ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம்—காங்கேசன்துறை வீதி, 222-ம் இலக்க கடையில் கந்தையா பரமு அவர்களிடம் 23-5-64 தொடக்கம் 24-4-65 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை 15-11-66 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனவாளர்
''இராசகிரி''
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். 1343

## நடவடிக்கை எடுப்பதாக எம். பி. வாக்குறுதி

யாழ்ப்பாணம், செவ்.

'வாரட்' மணியாளர், மருந்து கலவையாளர் ஆகிய ஆஸ்பத்திரி சிறுசேவையாளருக்கு சிங்களத் தேர்ச்சி நிபந்தனையிலிருந்து விலக்களிக்கப்படவேண்டும் என்று தேசிய அரசாங்க சுகாதார சேவையாளர் சங்கம் சமர்ப்பித்த கோரிக்கை குறித்து நடவடிக்கை எடுப்பதாக உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் உறுதியளித்துள்ளார்.

இச்சங்கம் நேற்று முன்தினம் திரு. மு. சிவசிதம்பரத்தைச் சந்தித்து மற்றைய ஆஸ்பத்திரி சிறு சேவையாளரைப் போன்று குறிப்பிட்ட சேவையாளருக்கும் சிங்களத் தேர்ச்சியிலிருந்து விலக்களிக்குமாறு கோரியிருந்தது. இதுகுறித்து தாம் பிரதமரையும் சுகாதார மந்திரியையும் சந்தித்து நடவடிக்கை எடுப்பதாக எம். பி. தெரிவித்துள்ளார்.

இச்சங்கத்தைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் தெரிவிக்கையில் மந்திரி திரு. எம். திருச்செல்வத்தையும் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனையும் தாங்கள் சந்தித்து இவ்விஷயமாகக் கதைத்ததாகவும் ஆறுக் சிங்களம் படிக்கும்படி அவர்கள் ஆலோசனை கூறியதாகவும் சொன்னார்.

## வலிகாமம் மேற்கை சேர்ந்த இரு மாணவர்

கண்டி, திங்.

வலிகாமம், மேற்குப்பகுதியைச்சேர்ந்த இருசர்வகலாசாலை மாணவர்கள் ''சேஷ்டை'' செய்ததினால் இரண்டு தவணைகள் சர்வகலாசாலையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். மொத்தமாக எட்டு மாணவர்கள் இம்முறை தண்டிக்கப்பட்டுள்ளனர். மேற்கூறிய இருமாணவர்களும் வைத்தியப்பிரிவு மாணவர்கள்.


தீபாவளித் திருநாளை சிறப்பாகக் கொண்டாட
அரியதோர் சந்தர்ப்பம்!
இதுவரை
கண்டிராத புதிய டிசைன்களில்
றெடிமேட் உடுப்புகள்
எமது கைவசமுண்டு.
இன்றே உங்கள் தேவைகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்
டிசைன் றெடிமேட் ஸ்ரோர்ஸ்
B 27, பெரியகடை 1356 யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க தூதர் காவலில் வைக்கப்பட்டார்

## கினி அரசாங்கம் எதிர் நடவடிக்கை

### கானாவில் மந்திரி கைதானதற்கு அமெரிக்காதான் பொறுப்பாம்

கொனக்கிரி, அக். 31

கினிநாட்டிலுள்ள அமெரிக்க தூதரை கினி அரசாங்கம் காவலில்வைத்துள்ளது.

அடிசபாபாவில் நடக்கும் ஆபிரிக்க ஒற்றுமை மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக செல்லும்வழியில் ஆக்ராவில் இறங்கிய கினி வெளிநாட்டு மந்திரியையும் 18 அதிகாரிகளையும் கானா அரசாங்கம் காவலில் வைத்ததற்கு எதிர் நடவடிக்கையாக கினி இப்போது இந்த நடவடிக்கையை எடுத்திருக்கின்றது.

கினி வெளிநாட்டு அமைச்சரும் அதிகாரிகளும் கைது செய்யப்பட்டதற்கு அமெரிக்காதான் காரணம் என்றும் கினி இப்போது குற்றஞ்சாட்டியுளது அடிசபாபா செல்லவிருந்த கினி அமைச்சரும் அதிகாரிகளும் அமெரிக்க விமானத்தில்தான் பிரயாணம் செய்தார்கள் என்பதுகுறிப்பிடத்தக்கது.

கொனக்கிரியில் இப்போது வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள அமெரிக்கத் தூதருடன் விமான நிலைய அதிகாரியொருவரும் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஆக்ராவில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட கினி மந்திரியும் அதிகாரிகளும் கினியிலுள்ள கானா பிரஜைகள் விடுதலை செய்யப்பட்டால்தான் விடுவிக்கப்படுவர் என்று கானா ஏற்கனவே அறிவித்துள்ளது. கினிமந்திரி ஆக்ராவில்கைது செய்யப்பட்டதற்கு அமெரிக்காதான் காரணமென்ற கினி அரசாங்கத்தின் குற்றச்சாட்டுகளை அமெரிக்கா மறுத்திருக்கிறது.

இதற்கிடையில் கினி அதிகாரிகளை விடுதலை செய்வதற்கு எதியோப்பியா அக்கறை காட்டுவதை கானா கண்டித்திருக்கின்றது. கினி அதிகாரிகளைக் கைது செய்ததின் மூலம் சர்வதேச சட்டத்தையே கானா மீறிவிட்டதாக எதியோப்பியா குற்றஞ்சாட்டியுள்ளது.

# பஞ்சாப்-ஹரியானா ராஜ்யங்கள் உதயம்

புதுடில்லி, அக். 31

இன்று நள்ளிரவுடன் பஞ்சாப்-ஹரியானா ராஜ்யங்கள் உதயமாகவிருக்கின்றன.

புதிதாக உருவாகும் பஞ்சாப்-ஹரியானா ஆகிய இரு ராஜ்யங்களும் இன்றிரவுடன் ஜனாதிபதி ஆட்சியினின்றும் விடுபடவிருக்கின்றன. இந்த ராஜ்யங்களுக்குமான முதல் மந்திரிகள் விரைவில் விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொள்ளவிருக்கிறார்கள்.

கடந்த 15 ஆண்டுகளாக இருந்துவரும் சண்டிகர் நகர் இனி புதிய ராஜ்யங்களின் கூட்டுத்தலைநகராக இருந்துவரும்.

இந்த இருராஜ்யங்களும் உருவாவதின்மூலம், இந்திய அரசின் ராஜ்யங்களின் எண்ணிக்கை 17 ஆகவும் பிரதேசங்களின் எண்ணிக்கை 10 ஆகவும் அதிகரிக்கின்றன.

பஞ்சாப் ராஜ்யத்தில் பஞ்சாப் மொழியும், ஹரியானா ராஜ்யத்தில் இந்தி மொழியும் ஆட்சிமொழிகளாக இருக்கும் என்று தெரிகின்றது.

## பகிடி பலித்தது

டார் எஸ்ஸலாம், அக். 31

பிரயாணப் பையின் பாரத்தில் சந்தேகம் ஏற்பட்டதால் இங்குள்ள சுங்க அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பிரயாணியைச் சந்தேகக் கண்ணோடு பார்த்தனர். அவர் பகிடியாக 'இதற்குள் தங்கம் ஒளித்துவைத்திருக்கிறேன்' என்று சொன்னார். அதிகாரிகள் சோதனை போட்டபோது உண்மையாகவே 29 தங்கப்பாளங்கள் ஒளித்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்தனர். இவை 1,088 அவுன்ஸ் நிறையுள்ளவையென்று அறிவிக்கப்பட்டது. (பி.டி.ஸி.)

## புற்றுநோய் சிகிச்சையில் புதிய முறை

லண்டன், அக் 31

நியூத்ரோன் அணுத்துகள்களை உற்பத்தி செய்யக்கூடிய மின்குழாய் ஒன்றை உருவாக்குவதில் பிரிட்டிஷ் வைத்திய விஞ்ஞானிகள் இப்பொழுது தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். புற்றுநோய்களுக்கான சிகிச்சைத் துறையில் இது ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்திவிடுமென நம்பப்படுகிறது.

பிரிட்டிஷ் வைத்திய ஆய்வுக்கூடத்தில் நடாத்தப்பட்ட பூர்வாங்கப்பரீட்சையிலிருந்து, புற்றுநோய்களுக்கு "எக்ஸ்ரே" மூலம் அளிக்கப்படும் சிகிச்சைகளைவிட இதுமிக சக்திவாய்ந்ததாய் விளங்குமென்பது ஊர்ஜிதமாகியுள்ளது.

நியூட்ரோனை உற்பத்தி செய்யும் இச் சக்திவாய்ந்த மின்குழாயை உருவாக்குவதற்கு இன்னும் சிறிது காலம் செல்லலாமென பிரஸ்தாப ஆய்வுகூட விஞ்ஞானிஒருவர் கூறினார்.

# இதய இயல் மகாநாடு புதுடில்லியில் ஆரம்பம்

புதுடில்லி, அக். 31

இதய இயல் சம்பந்தமான 5-வது உலக மகாநாடு புதுடில்லியில் ஆரம்பமாகியுள்ளது. இந்த மகாநாட்டில் 45 நாடுகளைச் சேர்ந்த சுமார் 1000 பிரதிநிதிகளும் நிபுணர்களும் கலந்து கொள்கிறார்கள்.

நவம்பர் 5-ந் திகதி வரை நடைபெறவிருக்கும் இந்த மகாநாட்டை ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆரம்பித்துவைத்தார்.

அவர் அங்கு உரை நிகழ்த்துகையில் உலகின் பல பாகங்களையும் சேர்ந்த இருதய நிபுணர்கள் பங்குபற்றும் இந்த மகாநாட்டின் மூலம் இந்திய நிபுணர்கள் மேலும் அதிக அனுபவங்களைப் பெறுவார்கள் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

அமைதி நிறைந்த சாதாரண வாழ்க்கையின் மூலம் இருதய நோய் வராமல் தடுக்க முடியும் என்று ஜனாதிபதி கருத்து தெரிவித்தார்.

இந்திய சுகாதார மந்திரி டாக்டர் சுசீலா நையார் பேசுகையில், இந்தியாவில் இருதய நோய் சம்பந்தமாக ஆராய்ச்சிகள் நடந்து வருவதாகவும் அவை பயனளிப்பவையாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

## அஸாம் எல்லையில் அபாயம்

புதுடில்லி, அக். 31

அஸாம் எல்லையில் பெரிய அளவில் ஊடுருவல் ஒன்றை நடத்த பாகிஸ்தான் முஸ்தீபு செய்து வருவதாக அஸாம் முதன் மந்திரி திரு. சாலிஹா கூறியிருக்கின்றார். புதுடில்லி வரும் மார்க்கத்தில் கவுகாத்தி டம்டம் விமான நிலையத்தில் பத்திரிகை நிருபர்களிடம் இந்தக் கருத்தை அவர் வெளியிட்டார்.

## பத்திரிகையாளர் காங்கிரஸ்

பெர்லின், அக். 31

இம்மாதம் பெர்லினில் நடைபெற்ற சர்வதேசப் பத்திரிகையாளர் சம்மேளனத்தின் 6-வது காங்கிரசில் 69 நாடுகளைச் சேர்ந்த 138 பிரதிநிதிகளும் 287 பத்திரிகையாளர்களும் கலந்து கொண்டனர்.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் பிரதமர் திரு. விலிஸ்டொப்பும் காங்கிரசில் பேசினார். 22 புதிய பத்திரிகையாளர் சங்கங்களைச் சம்மேளனத்திற் சேர்த்துக் கொள்ள காங்கிரஸ் அனுமதியளித்தது. இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும், கினியா ஜனாதிபதியும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர். அடுத்த காங்கிரஸ் 1970-ல் கியூபாவில் நடைபெறும்.

## சர்வதேச முத்திரைக் கண்காட்சி

லண்டன், அக் 31

சர்வதேச முத்திரைக் கண்காட்சியொன்று அடுத்தவாரம் லண்டனில் நடைபெறவிருக்கிறது. லண்டன் சேமோர் மாளிகையில் நவம்பர் மாதம் 3-ந்திகதியிலிருந்து 5-ந்திகதிவரை நடைபெறவிருக்கும் இக்கண்காட்சியில் உலகத்தின் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த முத்திரைகள் காட்சிக்கு வைக்கப்படும்.

இக்கண்காட்சியில் சிறந்தவையெனத் தேர்ந்தெடுக்கப்படும் முத்திரைகளுக்கு தங்க வெள்ளிப்பதக்கங்கள் பரிசாக வழங்கப்படும். இக்கண்காட்சியில் பங்கு பற்றும் உலகநாடுகள் சிறந்த முத்திரைகளைத் தேர்ந்தெடுத்து போட்டிக்கு அனுப்பி வைத்திருக்கின்றன.

# ராணுவ யுத்தமொன்றை சீனு ஆரம்பிக்கலாம்

## 'டாஸ்' எச்சரிக்கை

மாஸ்கோ, அக். 31

சீனாமூலம் இராணுவ அபாயம் ஏற்படலாம் என்று சோவியத் பத்திரிகையான டாஸ் அறிவிக்கின்றது.

சீனாவில் தற்போது உருவாகியுள்ள செங்காவலர்கள் யுத்தமொன்றுக்கு தயார் செய்வதாக அவர்களின் பத்திரிகைகள் கூறுவதாகடாஸ் தெரிவிக்கின்றன. ஏராளமான ஆயுதங்களும், படைகளும் அவர்களிடம் இருக்கின்றனவென்றும், வெளிநாடுகளிலும்செங்காவலர்களின் அணிகள் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. நியூசிலாந்திலும், ஆஸ்திரேலியாவிலும் இந்த அணிகள் இருப்பதாக பீகிங்கிலிருந்து சமீபத்தில் வெளியேறிய ஒரு மாணவர் மாஸ்கோவில் தெரிவித்துள்ளார்.

## ரஷ்ய தபால் தலைவர்

மாஸ்கோ, அக். 31

மாஸ்கோ தபால் இலாகா தலைவர் தலைமையில் ஆஸ்திரேலியா செல்லவிருக்கும் ஒரு தூதுகோஷ்டி இலங்கை வரவிருக்கின்றது.

## காமன் வெல்த் காரியதரிசி

லண்டன், அக். 31

காமன்வெல்த் காரியதரிசி ஜெனரல் அடுத்த மாதம் 14-ந் திகதி இலங்கை வரவிருக்கின்றார். தற்போது இந்தியாவிலிருக்கும் அவர் இலங்கை விஜயத்தின்பின் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் செல்வார்.

## நில அதிர்ச்சிக்கு சிறுமி பலி

ஏதன்ஸ், அக். 31

மேற்கு கிறீஸில் ஏற்பட்ட நில அதிர்ச்சியில் ஒரு 10 வயதுச் சிறுமி கொல்லப்பட்டாள். 20 பேர் காயமடைந்தனர். 5,000 கிராமவாசிகள் வீடுகளை இழந்தனர்.

## இந்திய கப்பல்படை ஒத்திகை

புதுடில்லி, 31

இந்தியக் கப்பல் படையினர் நடத்திய சண்டை ஒத்திகை வெற்றிகரமாக முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது. இந்த ஒத்திகையில் இந்தியாவின் படையும் கலந்துகொண்டது. பம்பாய் நகரின் மீது தாக்குதல் நடைபெறுவதுபோன்ற ஒத்திகையொன்றுடன் ஒத்திகை நடவடிக்கைகள் முடிவடைந்தன.

## சுதந்திர கொள்கை

டோக்கியோ, அக் 31

மாஸ்கோ-பீகிங் சித்தங்களின் செல்வாக்கு இல்லாத சுதந்திரமான ஒரு கொள்கையைக்கடைப் பிடிப்பதென்று ஜப்பான் கம்யூனிஸ்ட் கட்சியின் 10-வது மகாநாடு முடிவெடுத்திருக்கிறது.

## பத்திரிகையாளர் நிலை என்ன

பெர்லின், அக். 31

ஒவ்வொரு நாடுகளிலும் பத்திரிகையாளர்களின் நிலைமை பற்றி ஆராய்வதற்காகக் கமிஷன் ஒன்றை பெர்லினில் கூடிய சர்வதேசப் பத்திரிகை காங்கிரஸ் நியமித்துள்ளது.

ஒவ்வொரு நாடுகளிலும் உழைக்கும் பத்திரிகையாளரின் தொகை, பத்திரிகையாளருக்கு அறிவிப்பு கொடுக்கும்முறை வேலையில்லாத பத்திரிகையாளருக்கு அளிக்கும் உதவிகள், பயிற்சியளித்தல், பதிவுரிமை, வேலை நேரம், விடுமுறை, ஓய்வுகால வசதிகள் ஆகியவற்றை இக் கமிஷன் விசாரணை செய்யும்.

## இளைஞர் மனப்போக்கை ஆராயும் நிலயம்

பெர்லின், அக். 31

இளைஞர்களின் நடவடிக்கைகளையும் மனப் போக்கையும் ஆராய்வதற்காக ஒரு மத்திய ஆராய்ச்சி நிலையம் பெர்லினில் நிறுவப்பட்டுள்ளது.

வாலிபர்களின் வளர்ச்சிக்காக விஞ்ஞான ரீதியான முயற்சிகளைச் செய்வதே இந்த நிலையத்தின் நோக்கம் என்றும், அரசாங்கம் எல்லா உதவிகளையும் நிலையத்திற்கு அளிக்கிறதென்றும் நிலையத்தின் அதிபர் டாக்டர் பிரெட்றிச் கூறியுள்ளார்.

## பிரிட்டன் வரவேற்பு

நியூயோர்க், அக் 31

கைத்தொழில் அபிவிருத்தி ஸ்தாபனம் ஒன்றை ஸ்தாபிக்குமாறு ஐ.நா. பொதுஸபா நாரக்கமிட்டி செய்துள்ள சிபார்சைப் பிரிட்டன் வரவேற்றுள்ளதுடன் முன்னேற்றமடைந்துவரும் நாடுகளுக்கு இது பெரும்பயனளிக்கக் கூடியதாக விளங்குமென நம்பிக்கை தெரிவித்துள்ளது.

ஐ.நா. கைத்தொழில் அபிவிருத்தி ஸ்தாபனம்" என்ற பெயரைப் பெறவிருக்கும் இந்தப்புதிய ஏஜன்சி, முன்னேற்றமடைந்துவரும் நாடுகளுக்கு உதவியளிக்கும் ஐ.நா. சபையின் முயற்சிகளை மேலும் தீவிரப்படுத்தும்.

## காணி நன்கொடை

திருநெல்வேலி, திங்.

கைதடி இந்துவாலிபர்சங்கத்தின் பிரார்த்தனை மண்டபம் நிறுவுவதற்கு கைதடி மூர்த்தியாவத்தை கந்தசாமி கோவில் தருமபாலகரும் முன்னாள் கிராமஅதிகாரியுமான திரு. சங்கரப்பிள்ளை நவரத்தினம் மேற்படி கோவிலுக்கு அருகாமையில்காணி நன்கொடையாக வழங்கியுள்ளார். மண்டபம் நிறுவுவதற்குரிய முயற்சிகள் தீவிரமாக செய்யப்பட்டுவருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பாலைவனத்திடையே ஒரு பசுஞ்சோலை போன்றது ஆசிரமம். ஆசைகள், போட்டிகள், சமூகக் கிளர்ச்சிகள் முதலிய புயல்களின் அடிபட்டு சம்சாரமாகிற பாலைவனத்திலே தவித்து, சாந்தியும் ஒருவருக்கு மன அமைதியும் உண்மை இன்பமும் அளிக்கக்கூடியது ஆசிரமமே. மகாத்மாக்களின் சற்சங்கமும் தனித்திருந்து தியானிப்பதற்கான சூழ்நிலையும் அங்கு உண்டு.

—சுவாமி சிவானந்தர்


# ஈழநாடு

EELANADU National Tamil Daily Post Box 49 JAFFNA
Telegrams : EELANADU Jaffna Telephone : 123

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஐப்பசி மீ 16 (1-11-66


## மீண்டும் வகுப்பு வெறிக்குத் தூபமா?

'திருவாழத்தான் இருந்தும் கெடுத்தான் செத்தும் கெடுத்தான்' என்று தமிழ் நாட்டில் ஒரு பழமொழி உண்டு. நம்நாட்டிலுள்ள சில 'அரசியல் ஆதிக்க வெறியர்கள்' ஆட்சிப்பீடத்திலிருந்தாலும் சரி ஆட்சி பீடத்திலிருந்து மக்களால் அகற்றப்பட்டாலும் சரி வகுப்புவெறியைக் கிளப்பி அரசியல் 'இலாபம்' சம்பாதிக்க, நாட்டின் அமைதியைக் குலைக்கும் செயல்களில் ஈடுபடுவதைப் பார்க்கும்போது 'திருவாழத்தான்' பழமொழிதான் நினைவு வருகிறது.

வகுப்புவாத ஸ்தாபனமொன்றின் 'முன்னணி' கல்கிசையில் அந்தரங்கக் கூட்டம் நடத்தி அரசாங்கக் காரியாலயங்களில் தமிழ் உத்தியோகத்தர்களைப் பகிஷ்கரிக்கவும் தமிழரின் கடைகள், வர்த்தக நிலையங்களைப் பகிஷ்கரிக்கவும் 'திட்டங்கள் தீட்டியதாகவும்' நவம்பர் நான்காந் திகதி கொழும்பிலிருந்து மோட்டார்கார் பவனியொன்று 'குருநாகலை'யில் சிறிது தங்கி 'ஆதரவாளர்களை' ஏற்றிக்கொண்டு அநுராதபுரம் சென்று துட்டகைமுனு சிலையின் முன் 'பிரதிக்ஞை' செய்யத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இத்திட்டங்களும் இதன் நோக்கங்களும் 'ஆண்டிகள் கூடி மடம் கட்டியது' போன்றதென அலட்சியமாக இருந்துவிட முடியாது. 1958-ம் ஆண்டில் வகுப்புக்கலவரம் என்ற கொடுந்தீ நாட்டில் சுவாலைவிடத் தொடங்குவதற்கு முன்னர் துட்டகைமுனு சிலைமுன் குளுரைத்த சபதங்களும், 'வெள்ளவத்தை' போன்ற தமிழர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் 'வெளியேற்ற நோட்டீஸ்கள்' பிறப்பிக்கப்பட்டதும் "பத்தேகம", 'தல்பகின்' போன்ற 'மேடைகளில்' தமிழர் பகிஷ்கரிப்பு' பற்றிப் பிரசாரம் செய்ததும் மறந்துவிடக்கூடிய விஷயங்களல்ல. தமிழர்களுக்கு வழங்கப்பட்ட 'வெளியேற்ற நோட்டீஸ்கள்' பற்றி அவற்றில் சில பிரதிகளைப் பார்லிமெண்டில் காண்பித்துத் தலைவர்கள் சிலர் 'உடனடி நடவடிக்கை' எடுக்கவேண்டுமென்று கோரியபோது அப்போது பிரதமராகவிருந்த காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்கா அதை அலட்சியம் செய்தார். அதன் விளைவு ஆட்டைக்கடித்து, மாட்டைக் கடித்து ஆளையே கடித்ததையாக 1959-ம் ஆண்டில் திரு. பண்டாரநாயகாவே பரிதாப முடிவுக்கு ஆளாகநேர்ந்தது.

1958-ம் ஆண்டில் நிகழ்ந்த கோர சம்பவங்களையும் அதன் விளைவுகளையும் நன்கு அறிந்திருந்தும் 'அரசியல் ஆதிக்கவெறி' கண்ணை மறைத்துள்ள சிலர் மீண்டும் இந்நாட்டில் வகுப்புத் துவேஷத்தைக் கிளப்பி வகுப்புவாதப் பிசாசைக்கட்டவிழ்த்துவிட முயற்சிசெய்கின்றனர். தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டத் திடசங்கற்பம் பூண்டுள்ள பிரதமரும் தேசிய அரசாங்கமும் இந்த முயற்சியிலீடுபடும் தேசத்துரோகிகள் மீது உடனடியாகக் கடும் நடவடிக்கை எடுத்து அவர்களது முயற்சியை முளையிலேயே கிள்ளியெறியவேண்டும். இதற்கு நாட்டு மக்களின் ஆதரவு நிச்சயம் கிடைக்கும்.

## 12 மாதங்களில் அமைதி

இன்னும் பன்னிரண்டு மாதங்களில் வியட்நாமில் அமைதி நிலவும் என்று அமெரிக்க அதிபர் ஜோன்சனின் விசேஷ தூதுவர் திரு. அவரெல் ஹரிமன் கண்டியில் மல்வத்தை மகாநாயக தேரோவைச் சந்தித்தபோது கூறியிருக்கிறார். வியட்நாமில் அமைதி நிலவ இன்னும் பன்னிரண்டு மாதங்களாகுமென்றால், இந்தக் காலத்தில் அங்கு என்ன மிஞ்சும் என்று அஞ்சவேண்டியுள்ளது.

வியட்நாமில் சமாதானத்தையும் அமைதியையும் நிலைநாட்ட அமெரிக்கா இப்பொழுது முயற்சிசெய்கிறதென்பது உண்மையே. அங்கு சமாதானத்தை நிலைநாட்டுவது பலநடவடிக்கைகளையும் எடுக்க முனைகிறது. படைகலக்களுக்கு 'ஆறுமாத கெடு' விதித்து மணிலா மகாநாடு நிறைவேற்றிய தீர்மானம் அதன் முயற்சிக்கும் 'கௌரவத்துடன் வியட்நாம் பிரச்னையிலிருந்து வெளியேற அது கொண்டுள்ள ஆர்வத்துக்கும் ஓர் எடுத்துக்காட்டு. சமாதானம் ஏற்படுவதற்கு ஒரு தரப்பினர் மட்டும் எடுக்கும் முயற்சி போதாது என்பதும் உண்மையே. ஆயினும் உண்மைநிலையை உணர்ந்து அதற்கு ஏற்ற முறையில் முன்னரே நடந்துகொண்டிருந்தால் இன்றைய அவலநிலை ஏற்பட்டிருக்காது.

இருதரப்பினருக்குமிடையில் நடைபெறும் பலப்பரீட்சைக்கு அநியாயமாக வியட்நாம் அப்பாவிமக்கள் தினமும் பலியாகவேண்டுமா? இன்னும் பன்னிரண்டு மாதங்களில்தான் அங்கு அமைதி ஏற்படுமென்றால் அந்த அமைதி எப்படியிருக்கும்? வியட்நாம் மக்களே இருக்கமாட்டார்களா? இப்படி அஞ்சுவதற்குக் காரணமில்லாமலில்லை. என்றாலும் அமெரிக்கா சிறிது அதிக முயற்சி எடுத்து விரைவில் வியட்நாம் பிரச்னைக்கு சுமுகமான தீர்வு காணுமென்று நம்புவோம்.

# இலங்கை-இந்தியர் கலைஞர் விழா

## யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

யாழ்ப்பாணம், செவ்.

இலங்கை இந்திய முன்னணிக் கலைஞர்களைக்கொண்ட 'கலைஞர் பெருவிழா' 1967-ம் ஆண்டு மாசி மாத நடுப்பகுதியில் யாழ்நகரில் நடைபெறவுள்ளது. இத்தகவலை சமீபத்தில் டில்லியில் நடைபெற்ற 'பீப்பிள்ஸ் தியேட்டர்ஸ் அசோசியேசன்' கலைவிழாவில் ஈழத்தின் சார்பில் கலந்துகொண்டு தாயகம் திரும்பிய நாட்டிய கலைஞர் வேல் ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ் 'கலா மண்டலம்' சார்பில் நடைபெறவிருக்கும் இக்கலைஞர் விழா இவ்வருடம் நவம்பர் மாதத்தில் நடக்கவிருந்தது. காலநிலை பற்றிய காரணத்தாலும், இந்தியக் கலைஞர்களை அழைப்பதற்கான ஒழுங்குகள் தாமதமான காரணத்தினாலும் மாசி மாதம் வரை பின்போடப்பட்டுள்ளது. 'கதக்' நடனக் கலைஞர், 'ஆஷா நட்கர்னி, மணிபுரி நடன ராணிகள், 'சர்மா' சோதரிகள், ''கதகளி" நடனக் கலைஞர் நாராயண மேனன், சித்தார் வாத்தியக் கலைஞர், சி. கே. அலிகான் உட்பட தென்னிந்திய சினிமா உலகின் முன்னணி நடிகர்கள் பலரும் கலந்து கொள்ளவிருக்கின்றார்கள். மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இக்கலை விழாவில் ஈழத்தின் நாட்டிய, நாடக, இசை முன்னணி கலைஞர் பலரும் கலந்துகொள்வார்கள். இதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க திரு. ஏ. எஸ். மணி தலைமையில் இருபது பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கின்றது.

# நாட்டிலும் நகரிலும்

முதநாள் இரவு நண்பனது வீட்டில் ஒரு திருக்கல்யாணம். 'கொண்டாட்டம் நான்கு நாட்கள் நடைபெறும்' என்று திருமண அழைப்பிதழ் எச்சரிக்கை செய்தபோதே நான்கு நாட்கள் லீவு போட்டுவிட்டு எங்கேயாவது ஓடித்தப்பிவிடலாமோ என்று நினைத்தேன். லீவு கிடைக்கவில்லை. நித்திரைக்குளிகைகளை வாங்கி அடித்துப்போட்டு நிம்மதியாகப் படுக்கலாமோ என்று எண்ணினேன். எக்கச்சக்கமாக குளிகைகளை கூடக் குறைய விழுங்கிவிட்டால் பிராணாபத்து வந்து விடுமே என்று பயந்து அந்த எண்ணத்தையும் கைவிட்டுவிட்டு 'ஆண்டவனே நீ தான் துணை' என்று அவன் மீது பாரத்தைப் போட்டு நெஞ்சத்தைத் திடப்படுத்திக்கொண்டேன்.

அதிகாலை ஆறுமணிக்கே தாக்குதல் ஆரம்பித்தது முதலில் கே. பி. சுந்தராம்பாள் 'ஞானப்பழத்தை' பிழிபிழியென்று பிழிந்து தள்ளினார். அடுத்து பங்களூர் ரமணி அம்மாள் பால்காவடி, செடில் காவடி எல்லாம் எடுத்து ரகளை பண்ணினார். அவரைத் தொடர்ந்து சௌந்தரராஜனும் சுசீலாவும் மாறிமாறிசக்கைபோடு போட்டார்கள். கடைசியாக வந்தாரையா சந்தச்சரப சண்டமாருத சிவாஜி கணேசன்! 'போர், போர்: வெற்றிவேல், வீரவேல் என்று ஓராயிரம் யானைகள் பிளிறுவதுபோல கத்திக் குளறினார். இந்தக் களேபரத்துக்கு பின்னணியாக நூறு பூனைகளும் இருநூறு நாய்களும் வாக்குவாதம் செய்வதுபோல 'சிர்ர், கர்ர், புர்ர்,' என்ற ஒலிக்குழப்பம் ஓயாமல் நடந்து கொண்டிருந்தது. ஏககாலத்தில் சூரபத்மனின் அவுணப்படைகளும் ராமபிரானின் வானரச் சேனைகளும் நேருக்கு நேர் முட்டாகப் பொருதிக் கொண்டது போன்ற பிரமை ஏற்பட்டது. நல்லவேளையாக வேலைக்குப் போகும் நேரம் வந்துவிட்டபடியால் யுத்தகளத்திலிருந்து வெளியேறினேன்.

மாலையில் வீடு திரும்பும்போது கிராமப்புறத்தின் சாயுங்கால அமைதியைக் கிழித்துக் கொண்டு ஒன்றரை மைலுக்கப்பாலேயே யுத்த முழக்கம் என்னை வரவேற்றது. வீட்டை அணுகியபோது இனம் தெரியாத ஓர் ஆண்கன்னை றகி... [illegible]

'பிரேக்' போடுவதுபோன்ற கீச்சுக்குரலிலும் ஒருவரை ஒருவர் எதிர்த்து கடுஞ்சமர் புரிந்துகொண்டிருந்தார்கள்.

கையில் கொண்டு போன பேப்பரை குழாய் போலச் சுற்றி வாயில் வைத்து 'தேநீர் கொண்டுவா' என்று அறைக்குள்ளிருந்து குசினிக்கு ஒலிபெருக்கினேன்.

அன்றிரவு சிம்ம சொர்ப்பனம் காணப்போகிறேன் என்று நான் எள்ளளவும் எதிர்பார்க்கவில்லை. மணி ஒன்பதாகிற்று. சிவாஜி கணேசனும் மேஜர் பனர்மனும் பின்வாங்கி விட்டார்கள். அவர்களுடைய இடத்தை அந்தோ, உள்ளூர் 'சிவாஜிகள்' சிலர் பிடித்துக் கொண்டார்கள். அந்த மன்னவ 'பராசக்தி' 'மனோஹரா' 'கட்டபொம்மன்' என்ற படங்களில் கத்திக்கொட்டிய சிலவசனங்களை இந்த நாட்டுப்பிரதிகள் மின் நாடாவில் ஒலிப்பதிவுசெய்து நம்மை இன்புறச்செய்வதாக நினைத்துக்கொண்டு தன்புறத்தை ஆரம்பித்துவிட்டார்கள்.

ஐயையோ, அதை என்னவென்று வர்ணிப்பது! சிவாஜி கணேசன் அதைச்செவிமடுத்திருந்தால் அடுத்த கணமே சினிமா நடிப்புக்கு முழுக்குப் போட்டிருப்பாரென்பது நிச்சயம். ஆவேசத்தோடு அவர்வேகம் போது ஒவ்வொரு வசனத்தின் முடிவிலும் மூச்சை இழுத்து இழுத்துப்பேசுவாரே; அதை இந்தப்போலி சிவாஜிகள் 'காப்பி' யடிக்கும் போது காட்டுப்பன்றி உறுமுவது போலிருந்தது!

படித்த நமது வாலிபர்கள் இப்படி சினிமா வசனங்களை மனனம் செய்த நேரம் திருக்குறளிலோ, திருவாசகத்திலோ, சிலப்பதிகாரத்திலோ, சிந்தாமணியிலோ, பட்டினத்தாரிலோ, தாயுமானவரிலோ சிலவற்றைக் கலைப்பாடம்செய்திருந்தால் எவ்வளவு நன்மையுண்டாகியிருக்கும்!

இரவு பன்னிரண்டுமணிக்கு இந்த யமவாதனை நின்றபோது (ஒலிபெருக்கிக்காரனுக்கும் நித்திரை வரும்தானே!) 'இறைவா கசிவேகம்பனே' என்றுகண்களை மூடியபோது நித்திராதேவி என்னை அரவணைத்து ... வரமறுத்துவிட்டாள்!

—வழிப்போக்கன்

### ஆசிரியருக்குக் கடிதங்கள்

## மானிப்பாய்க்கு 25 சதம்

யாழ்ப்பாணத்திலிருந்து மானிப்பாய்க்குத் தாவடி, ஆனைக்கோட்டை ஊடாகச் செல்லும் இருபஸ் சேவைகளுண்டு; ஆனாலும் குறிப்பிட்ட நேரத்திற்குப் போய்ச் சேர இயலாமல் பொதுமக்கள் அவதியுறுகிறார்கள். அந்நேரங்களில் மானிப்பாய் யூடாகச் செல்லும் பஸ்களில் செல்லவேண்டுமானால் குறித்த கட்டணமான இருபது சதத்தைவிட ஐந்து சதம் மேலதிகக் கட்டணம் செலுத்தினால்தான் போக முடிகிறது. ஏனெனில் மானிப்பாய்க்கென்று பிரத்தியேக பஸ் சேவை இருப்பதாக இந்த பஸ்களில் பிரயாணிகளை இடமிருந்தும் ஏற்றிச் செல்ல கண்டக்டர்கள் மறுத்துவிடுகின்றனர். எனவே பொதுமக்கள் இருபத்தைந்து சதம் கொடுத்து சண்டிலிப்பாய் டிக்கற் எடுத்து மானிப்பாயில் இறங்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுபற்றி நடவடிக்கை எடுப்பார்களா?

மு. க.

மானிப்பாய்.

ஃ ஃ ஃ

## பரீட்சை முடிவு!

கடந்த ஆகஸ்ட் மாதம் 18-ந் திகதி ஆரம்பித்த ''பொதுக் கலைத் தேர்வுப்'' (G. A. Q) பரீட்சை முடிவுகள் பல்கலைக்கழக மாணவர்கட்கு மூன்று கிழமைகட்கு முன்னதாகத் தெரிவிக்கப்பட்டன. அதே வேளையில் பரீட்சைக்குத் தோன்றிய G. A. Q. தனிப்பட்ட மாணவர்களின் பரீட்சை முடிவுகள் இன்னும் வெளியாகவில்லை. பல்கலைக்கழகம் தமது இரண்டாவது தவணை வேலைகளை ஆரம்பித்த பின்னும்கூடத் தனிப்பட்ட மாணவர்களின் முடிவுகளை அறிவிக்காமல் இருப்பது கவலைக்கிடமாகஇருக்கிறது. வருங்காலத்திலாவது தனிப்பட்ட மாணவர் விஷயத்தில் இத்தகைய அலட்சியம் காட்டப்படமாட்டாது என்று எதிர்பார்க்கிறோம்.

மட்டுக்கோட்டைக் கல்லூரித் தனிப்பட்ட பொதுக்கலை மாணவர்

ஃ ஃ ஃ

## சபையைக் கலைக்கட்டும்

திருவள்ளுவர் மகாசபைத் தலைவர், சிறுபான்மைத் தமிழர் சத்தியாக்கிரகம் செய்வது மிகத் தவறு என்ற முறையிலும் சிறுபான்மைத் தமிழர் என்று ஓர் இனம் இல்லை என்ற முறையிலும் அறிக்கைகள் பல வெளியிட்டுள்ளார். ஆனால் சிறுபான்மைத்தமிழருள் உள்ள ஒரு பிரிவினரில் ஒருசிலரைச் சேர்த்து அதற்குத் தான் தலைவராக இருக்கின்றார் எப்படி அவர் தலைவராக இருக்க முடியும். அடுத்து மாவட்டசபைகளில் கணிசமானஸ்தானங்கள் ஒதுக்குவதையும் அவர் எதிர்க்கின்றார். உண்மையில் குறைந்த ஓர் இனம் தன் உரிமைகளைப் பெறவேண்டுமானால் போராடித்தான் பெறவேண்டும். அப்படித்தான் உலகில் உள்ள சிறுபான்மை இனம் தன் உரிமைகளைப் பெற்றார்கள் என்பதையும் இன்னமும் போராடிக்கொண்டிருக்கின்றது என்பதையும் அவர் அறியவேண்டும். உண்மையில் சாதிகள் இல்லை என்று அவர் கருதினால் அவர் தலைவராக இருக்கும் சபையைக் கலைத்துவிடுவதுதான் அவர் செய்யும் சிறந்த பணி என நினைக்கின்றேன்.

வே. தம்பிராசா.

கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்கள் தொழிலில்லாமல் வறுமையுடன்போராடுகின்றனர்

## வலையில்லாத கஷ்டம் பற்றி மந்திரிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், செவ். 'சிறகுவலை, நைலோன் வலை இல்லாத காரணத்தினால் ஆயிரத்திற்கு அதிகமான மீனவர்கள் தொழில் இல்லாமல் வறுமையுடன் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

கைத்தொழில் மந்திரி திரு. பிலிப் குணவர்த்தனாவிற்கு வடமாராட்சி மீன்பிடியாளர் கூட்டுறவுச் சங்கசமாஜம் அனுப்பியுள்ள மகஜரில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

சிறகுவலை மீன்பிடியாளர் இங்குதான் அதிகமாக இருக்கின்றனர். ஆழமில்லாத கடலில் மீன்பிடிக்கத்தான் சிறகு வலையை உபயோகிக்கிறார்கள். இப்பகுதியில் உள்ள ஏழை மீன்பிடியாளர் சிறகுவலை, நைலோன்வலைகளைப் பாவிக்கின்றனர்.

மீன்பிடிகூட்டுஸ்தாபனம், மோட்டார் வள்ளத்தின் மூலம் மீன்பிடிக்கும் வலைகளையே கூடுதலாக இறக்குமதிசெய்து வருகின்றன. இவ்வலைகள் இப்பகுதி மீன்பிடியாளருக்கு ஏற்றதல்ல. 6,000 சிறகுவலைகளை இறக்குமதிசெய்து தருவதாக மீன்பிடி கூட்டுஸ்தாபன உதவி மனேஜர் வாக்குறுதியளித்தார். ஆனால் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

சிறகுவலை இல்லாததனால் 850 குடும்பங்களும், நைலோன்வலை இல்லாததனால் 1000 குடும்பங்களும் தொழிலின்றி கஷ்டப்படுகின்றன. இதனால் வலைத்திருட்டு அதிகரித்திருப்பதோடு மற்றும் பலவித குற்றங்களும் அதிகரித்துவருகின்றன. இந்நிலைமையை சீராக்க உடனடியாக சிறகுவலை, நைலோன் வலைகளை இறக்குமதி செய்ய எங்கள் சமாஜத்திற்கு அனுமதிவழங்கவேண்டும்.

# 'சுடடா' என்றேன் சுட்டார்'

## கொலைமுயற்சி வழக்கில் சாட்சியம்

மாவிட்டபுரம், திங்கள் முதலாம் எதிரிகைத்துப்பாக்கியைக் காட்டிச் சுடுவேன் என்றார். நான் 'சுடடா; பார்ப்போம்' என்றேன். உடனே என்னை நோக்கிச் சுட்டார். அவர் சுட்டதும் நான் குந்திவிட்டேன். சூடுஎனது இடது தோளில்பிடித்தது."

மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். திற்சிங்கா முன்னிலையில் நேற்று விசாரிக்கப்பட்ட பலாலி கொலைமுயற்சிவழக்கில் சாட்சியமளித்த மத்தியஸ் அந்தோனிப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கில் பலாலியைச் சேர்ந்த லூக்காஸ் அந்தோனிப்பிள்ளை என்பவர் சென்ற செப்டம்பர் மாதம் 17ம் திகதி அதேயிடத்தைச் சேர்ந்த மத்தியஸ் அந்தோனிப்பிள்ளையை கைத்துப்பாக்கியினால் சுட்டுக்கொலை செய்யமுயன்றதாகவும் அதேநேரத்தில் லூக்காஸ் மைக்கேல்பிள்ளை என்பவர் மத்தியஸ் அந்தோனிப்பிள்ளையையும், மத்தியஸ் பேம்சையும் கத்தியால் வெட்டியதாகவும் காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மாஜிஸ்திரேட் மேல் விசாரணையை அடுத்தமாதம் 20ம் திகதி வரை ஒத்திவைத்தார். —

சாவகச்சேரி நகரசபைத் தலைவர்

# மீண்டும் தேர்தலில் போட்டியிடமாட்டார்

யாழ்ப்பாணம், செவ் நான் "நகரசபைத் தேர்தலில் இம்முறை போட்டியிடவில்லை". சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. ஆர். டி. சிவகுரு நேற்றுக்காலை நமது நிருபரிடம் மேற்கண்டவாறு கூறினார்.

மீண்டும்போட்டியிடும்படி தமது ஆதரவாளர்கள்பலர் தம்மைக் கேட்டதாகவும், தான் அதற்கு மறுத்துவிட்டதாகவும் இதுவரை தனது நிர்வாகத்தில் எவ்வித பிழையும் கண்டுபிடிக்கப்படவில்லையென்றும் அவர் மேலும்தெரிவித்தார்.

திரு சிவகுரு மேலும் தெரிவித்ததாவது: என்நிர்வாகத்தின் மீது பிழைகள் இருப்பதாக அரசாங்கத்தினர் உயர் அதிகாரிகளுக்கு புகார் செய்த போதிலும், இதுவரை எந்தவிதமான பிழையும் கண்டு பிடிக்கப்படவில்லை. நான் என்கடமையை நேர்மையாகவும் துணிவாகவும் செய்து வந்திருக்கிறேன். எல்லா வட்டாரங்களின் அபிவிருத்தியிலும் கவனம் செலுத்திவந்தேன்.

# தேர்தல் சட்டத்தில்மாற்றம்செய்ய தெரிவுக்குழுநியமிக்க வேண்டும்

## பார்லிமென்டுக்கு வரும் பிரேரணை

கொழும்பு, திங்கள் பொதுத் தேர்தல் சம்பந்தமாக இப்பொழுதுள்ள சட்டத்திலும், நடைமுறைகளிலும் மாற்றங்கள் பற்றி சிபார்சு செய்வதற்கு தெரிவுக்குழுவொன்றை நியமிக்க வேண்டுமென்ற பிரேரணையை இம்மாதம் 6-ம்திகதி பார்லிமெண்டில் சபைமுதல்வர் திரு. ஸி. பி. டி. சில்வா கொண்டுவரவிருக்கிறார்.

முன்னறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ள இப்பிரேரணையின் முழுவிபரம் வருமாறு:

இலங்கை பாராளுமன்றத் தேர்தல் பற்றிய அரசவைக் கட்டளையின் ஏற்பாடுகள் தொழிற்படும் முறைபற்றி ஆராய்வதற்கும் கடந்த பொதுத்தேர்தலிலேற்பட்ட அனுபவத்தைக்கொண்டு தேர்தலில் இப்பொழுதுள்ள கட்டத்திலும், நடைமுறைகளிலும் ஏற்படுத்தப்படவேண்டிய விரும்பத்தக்க மாற்றங்கள் பற்றி சிபார்சு செய்வதற்காகவும் தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்படவேண்டும். அக்குழுவின் உறுப்பினர்கள் சபாநாயகரினால் நியமிக்கப்படுவதோடு, ஆட்களை அழைத்து விசாரணை செய்வதற்கும், பத்திரங்கள் சாதனங்கள், பதிவேடுகள் ஆகியவற்றைப் பெறுவதற்கும் அக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்படவேண்டும். காலத்துக்குக் காலம் அறிக்கைசமர்ப்பிப்பதற்கும், சபையின் ஒத்திவைப்பினால் பாதிக்கப்படாது கூடுவதற்கும் அக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்படவேண்டும்.

# 'அமெரிக்க பாடசாலைகளில் நிறவெறி தாண்டவமாடுகிறது'

## உடுப்பிட்டி எம்.பி. உரும்பிராய் இந்துவில் உடுப்பிட்டி எம்.பி

யாழ்ப்பாணம், செவ். "அமெரிக்க மத்திய அரசாங்கம் கறுப்பு நிறத்தவரின் குழந்தைகளுக்கு நிறபேதமின்றிக் கல்வித்துறையில் சமத்துவம் அளிக்கும் சட்டங்களை இயற்றியுள்ள போதிலும் பாடசாலைகளில் நிறவெறி தாண்டவமாடுகிறது" என்று உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் தெரிவித்தார்.

உரும்பிராய் இந்துக் கல்லூரி சரித்திர அரசியல் மன்றக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

மன்றத்தலைவர் திரு. த. ஆனந்தராஜாவின் தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:-

ஜனநாயகம் பற்றி அமெரிக்காவில் வானளாவப்பேசப்படுகிறதெனினும், தனிபொருநபரான ஜனாதிபதிக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போல வேறெந்த ஜனநாயக நாட்டிலுங் கொடுக்கப்படவில்லை வியட்னாம் மீது குண்டு வீசப்படவேண்டுமென்ற தீர்மானம் அமெரிக்கப் பாராளுமன்றத்தால் எடுக்கப்படவில்லை, ஜனாதிபதி ஜோன்சனே அதைத் தீர்மானித்தார்.

பொருளாதாரத்துறையில் அமெரிக்கா சிறந்து விளங்குவதற்கு அந்நாட்டின் இயற்கை வளம்மட்டுமன்றி அங்கு அபிவிருத்தியடைந்துள்ள தொழில்நுட்ப வளர்ச்சியுமாகும். 'சவர்லெற் கார்' த் தொழிற்சாலையில் வேலை செய்யும் ஒரு தொழிலாளி மாதமொன்றுக்கு 500 டொலர் சம்பளம் பெறுகிறான். ஆனால் திட்டமிடப்பட்ட ஒரு பொருளாதார அடிப்படையில் தேசிய வருமானம் பங்கிடப்படுமாயின் அங்குள்ள சாதாரண தொழிலாளியின் வாழ்க்கைத்தரம் பத்துமடங்கு உயர இடமுண்டு."

செயலாளர் திரு. துரை மனோகரன் நன்றி கூறினார்.

# மீண்டும் மருந்துத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மீண்டும் மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் பல நோயாளிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

14-ம் வாட்டில் உள்ள நோயாளிக்கு இருதினங்களாக மருந்துகள் கொடுக்கப்படவில்லையென்றும், இதற்கு காரணம், அவருக்கு கொடுக்க வேண்டிய மருந்து அங்கில்லையென்றும் அறியப்படுகிறது.

அரவந்தீண்டி சிகிச்சைக்காக வந்த ஒரு சேவையர் ஒருவருக்கு தேவையான மருந்து ஆஸ்பத்திரியில் இல்லாத காரணத்தால், டாக்டர் அந்த மருந்தை உடனடியாக தயாரித்து, அவரின் உயிரைக் காப்பாற்றியதாக தெரிய வருகிறது.

# தாலிக்கொடி மோசடி வழக்கில் எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், செவ். தாலிக்கொடியை வாங்கி மோசடி செய்ததாக இருவர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ் வழக்கு நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில் பெரியகடையை சேர்ந்த ரூபோக்காநல்லையாவிடம் 64-ம் ஆண்டு, ஆகஸ்ட் 15-ம் தேதி 1000 ரூபா பெறுமதியான தாலிக்கொடியை வாங்கி திருப்பிக்கொடாது மோசடி செய்ததாக ராசதுரை, மரியதாஸ் ஆகிய இருவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில்புறக்டர் ஆர். விஸ்வநாதன் ஆஜரானார். வழக்காளி தரப்பில் கரையூர் பொலிஸாருடன் புறக்டர் ஏ. அன்ரனி ஆஜரானார்.

ரூபோக்கா சாட்சியமளிக்கையில் தாலிக் கொடியை எதிரிகளிடம் கொடுத்து 7 மாதத்தின்பின்தான் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததாக கூறினார்.

விசாரணையின்பின் மாஜிஸ்திரேட் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

# பரிசு பெற்றோர் இவர்கள் தான்

கைதடி இந்துவாலிபர் சங்கம் தமது மூன்றாவது சைவ மகாநாட்டின்போது நடத்திய திருவைந்தெழுத்து போட்டி, நிதிசேர்க்கும் போட்டி, சரீர உதவிப் போட்டிகளில் பரிசுபெற்றோர்விபரம்வருமாறு:-

திருவைந்தெழுதும் போட்டி. செ. கார்த்தி சிவசோதிம்மா, ப. செல்லத்துரை, சிவதேவி

சரீர உதவிப்போட்டி. சு. வீரகத்தி.

நிதிசேர்க்கும் போட்டி ப. பாலச்சந்திரன், வி. கணேஸ்வரன், பண்டிதை தவமலர் சின்னத்துரை, த. புவிபராசா.

கைதடி மூர்த்தியாவத்தைக்கந்தசாமி கோவிலில் அமைக்கப்பட்ட [illegible] தொண்டர் ஆரம்ப [illegible] பெற்ற இலக்கியமகாநாட் [illegible] டில் முதனியார் திரு. செ. [illegible]

# கான்ஸ்டபிளுக்கு ரீமாண்ட்!

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸ் கன்ஸ்டபிள் ஒருவருக்கு ரீமாண்ட் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறையில் ஓர் இடத்தில் அத்துமீறிப் பிரவேசித்ததாக, பொலிஸ் கான்ஸ்டபில் ஒருவரை ஊர்காவற்றுறை பொலிஸார் நேற்று மாலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே ராஜரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

மாஜிஸ்திரேட், அவரை ரீமாண்டில் வைக்கும்படியும், நவம்பர் 3-ம் திகதி ஊர்காவற்துறை மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஆஜர் செய்யும்படியும் உத்தரவிட்டார்.

# 'மலையகத்தினர் வேறுபட்டவரல்ல; எம்முடன் இணைந்தவர்களே'

## கொட்டகலையில் வட்டுக்கோட்டை எம்.பி.

கொலன்னாந்தை, திங்கள் "மலையகமக்கள் எந்தவிதத்திலும் வடக்கு கிழக்கு மக்களோடு வேறுபட்டவர்களல்ல. கலை, கலாச்சாரம், வாழ்க்கைமுறை அனைத்திலும் இருசாராரும் பின்னிப்பிணைக்கப்பட்டே இருக்கிறார்கள். வடக்கு கிழக்கு மக்களோடு மலையகமக்கள் ஒன்றுபட்டு இருந்து வரும் நேரத்தில் பலதலைவர்களும், சங்கங்களும் எங்கள் ஒற்றுமையையும் பலத்தையும் குறைக்கச்சதி செய்கின்றன. இதற்கு ஒருபோதும் இடம் கொடோம்."

கொட்டகலை மம்படி தோட்டச்சந்தியில் திரு. ஆர். மாரிமுத்து தலைமையில் நடந்த இலங்கைத் தொழிலாளர்கழகக் கூட்டத்தில் இலங்கை தமிழரசுக்கட்சி பொதுச் செயலாளரும் வட்டுக்கோட்டை எம். பி. யுமான திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சே. கலியபெருமாள், செனட்டர் சு. நடராஜா ஆகியோர் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தொழிலாளர்களுக்கு நாம் கொடுக்கும் வாக்குறுதிகளை உடனுக்குடன் நிறைவேற்றி வருகிறோம். இன்னும் சிலவருடங்களில் இலங்கைத் தமிழர் என்ற ஒரு சமூகம்தவிர வேறெந்த பாகுபாடு காண்பித்து பேசுவதை ஒழித்து எல்லாரும் ஒருசமூகத்தைச் சேர்ந்தவரே என்ற எண்ணத்தை தமிழரசுக்கட்சி ஏற்படுத்திவிடும்"

## ரிமாண்டில் வைக்க உத்தரவு

யாழ்ப்பாணம், செவ் வலைத்திருட்டுச் சந்தேகத்தின்மீது கைதுசெய்யப்பட்டவர் ரிமாண்டில் வைக்கப்பட்டார்.

கரையூரைச்சேர்ந்தநடராஜா நாயகம் என்பவரை, 1000-ரூபா பெறுமதியான வலைகளைத்திருடியதாகச் சந்தேகத்தின்மீது, கரையூர் பொலிசார் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் நேற்றுக்காலை ஆஜர் செய்தனர்.

சந்தேகநபர் சார்பில் புறக்டர் திரு ஏ. அன்ரனி ஆஜரானார். விசாரணை முடியவில்லை என்று பொலிசார் தெரிவித்ததைத்தொடர்ந்து மாஜிஸ்திரேட் சந்தேகநபரை நவம்பர் 8-ந்திகதி வரை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

# இளம்பெண்ணை

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அடிக்கப் போய்விட்டார். பொலிஸ்காரரும் சென்றுவிட்டனர். இச்சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி நான் அரை நிர்வாணகோலத்துடன் கிராமசேவையாளர் வீட்டுக்குச் சென்று அவரிடம் எனது முறைப்பாட்டைப் பதிவுசெய்து, கிராமசேவையாளரின் உதவியுடன் பஸ்ஸில் ஏறி நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்கு வந்தேன். கிராமசேவையாளர் என்னை பஸ்ஸில் ஏற்றும்போது எனது மாமன் எனக் கூறும் பூவிலிங்கம் கிராமசேவையாளருடன் வாக்குவாதப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் இணைந்த பொருளாதாரம் தேவை

## நாடு முன்னேற இதுவே வழியாகும்

— பெரி. சண்முகநாதன் —

(இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி)

வளர்ச்சியடைந்த நாடுகளை அணுகி, அவைகளிடமிருந்து பொருளாதார சலுகைகள், உற்பத்தி நிபுணத்துவம், தொழில் நுணுக்கங்கள் போன்றவற்றைப் பெற்றுக்கொண்டுதான் இப்போது ஆரம்ப உற்பத்தி முறையிலிருந்து இரண்டாம் பட்சமான உற்பத்தி முறையை அடைய முயற்சி செய்யப்பட்டு வருகிறது. கைத்தொழில் வளர்ச்சியின் ஆரம்பக்கட்டத்தில் இத்தகையதொரு அணுகல் தவிர்க்க முடியாததொன்றாகும். மேற்படி அணுகல், நம்நாட்டுச்சாதனங்கள் மட்டிலுமேயே நமது வளர்ச்சி தங்கியிருக்கச் செய்யுமளவுக்கு உண்மையானதொரு விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சியை ஏற்படுத்தத் தவறுமாயின், அதனால் ஏற்படக்கூடிய பலாபலன்கள் தற்காலிகமானவையாகவே இருக்கும்.

அபிவிருத்தியடைந்தவரும் அல்லது அபிவிருத்தியடைய முற்படும் மற்றைய நாடுகளைப் போலவே, இலங்கையிலும் சனத்தொகை வேகமாகப் பெருகிவரும் இக்கட்டத்தில் மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது மட்டுமல்ல தற்போதுள்ள வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடையாமல், குறைந்துபோகாமல், தடுப்பதே பெரியபிரச்னையாக, சவாலாயிருக்கின்றது. குறைந்தளவு உற்பத்தியும் விவசாயத்திலேயே பெருமளவில் தங்கியிருக்கவேண்டிய நிலையும் அபிவிருத்திகுன்றிய நாடுகளின் தன்மைகளாக இருப்பதனால், இன்னும் புதிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமெழுந்த குறிக்கோள் கணிசமான அளவுக்குக் கைத்தொழிற்துறையில் ஓர் ஊக்கத்தை அல்லது ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது.

பலதரப்பட்ட சிறுசிறு பாவனைப் பொருள்களுக்கு இறக்குமதியிலேயே தங்கியிருக்கின்ற நிலை, சுதேசிய சாதனங்களைக் கொண்டே உள்நாட்டு உற்பத்தியை ஏற்படுத்தும் கவனத்தைக் கெடுத்து விடுகிறது. ஆரம்ப தொழில்நுட்பமுயற்சிகளும் தேர்ச்சி அடையும் கட்டத்தை அடையமுன்பே செயலற்றுப் போய்விடுகின்றன. இத்தகைய சூழ்நிலைகளால் உள்நாட்டு உற்பத்தியும், அதனால் ஏற்படக்கூடிய அனுகூலங்களும் இல்லாது போய்விடுகின்றன.

படுத்தவோ, பரந்த பொருளாதாரப் பிரமாணங்களின் (Broad Economic Criteria) அடிப்படையில் ஏற்படும் திட்டங்களை நிறைவேற்றவோ முடியாது. உருவாக்கத் திறமையில் அல்லது நிர்வாகத் திறமையில் இருக்கக்கூடிய குறைபாடுகளைக் குறைந்த கால எல்லையினுள் சிறந்தவிளக்கத்துடன் தெரிந்து தவிர்த்துவிட முடியும். ஆனால் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் இணைந்த ஒரு அடிப்படையை ஏற்படுத்துவதோ கடினமானதும், குறைந்தகால எல்லையினுள் சாதிக்க முடியாததுமான காரியமாகும். இருப்பினும் இவ்விஷயத்தில் ஒரு நல்ல ஆரம்பத்தை ஏற்படுத்துவதானால் இத்துறையின் தன்மைகள் பற்றிய விளக்கம் அல்லது ஆராய்வு மிக மிக அவசியமானதாகும்.

விஞ்ஞானமென்றால் முக்கியமாக ஒரு விளக்கமான அல்லது புரிந்து கொள்ளும் நிலையே ஆனால்தொழில் நுட்பம் என்பது குறிப்பிட்ட பொருளியல் நோக்குகளுக்கு விஞ்ஞானத்தைப் பிரயோகித்துச் செயல்படும் ஒரு கடின கலையாகும். ஒரு விஞ்ஞான உண்மையோ அல்லது கண்டுபிடிப்போ அறிவின் அல்லது புலமையின் வளர்ச்சியைக் காட்டுவதாகும். ஆனால் தொழில்நுட்ப சாதனையோ பொருளாதாரத்துறையிற் குறிப்பிடக்கூடிய ஒரு நிகழ்ச்சியாகும். விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளெல்லாம் சுதந்திரமாக எல்லாவிடமும் பரவிவிட முடியும். ஆனால் தொழில் நுட்ப சாதனைகளோ அத்தகையனவல்ல. அவை குறிப்பிட்ட ஒருவருக்கு அல்

(7-ம் பக்கம் பார்க்க)

## நாடும் நாமும்

கடந்த இருபது ஆண்டுகளாக குறைந்தகாலத் திட்டங்களும், நீண்டகாலத்திட்டங்களுமாகப் பல்வேறு வகையினதான திட்டங்கள் கைத்தொழில் விருத்திக்கென ஆக்கப்பட்டன. ஆனால் இத்திட்டங்களில் பெரும்பாலானவை பல வேறு காரணங்கள் காட்டப்பட்டுத் தடைபடுத்தப்பட்டன அல்லது கைவிடப்பட்டன. சில காலத்துக்கு முன்னர் தேசிய பொருளாதாரத்திட்டமொன்று கருவெடுத்த போதுகூட அது போதுமான அளவு ஊக்கத்துடனோ, கவனத்துடனோ நிறைவேற்றப்படவில்லை. பொருளியல் முதன்மைகள் உருவாக்கமும் நிர்வாகமும் சம்பந்தப்பட்ட ஆலோசனைகள் ஆகியனவற்றிலான அடிப்படையில் தோன்றக்கூடிய ஒரு மொத்தத் திட்டத்தின் முக்கியத்துவம் அன்றிலிருந்து இன்றுவரை வலியுறுத்தப்பட்டு வருகிறது.

### மாபெருங்குறை

நமது நாட்டில் இன்றுவரை குறிப்பிடக்கூடிய மாபெருங்குறையொன்று இருந்தே வருகிறது. அதுஎன்னவெனில், அபிவிருத்திக்கே முக்கிய ஆதாரமான 'வலுவுள்ள விஞ்ஞான, தொழில் நுட்ப அடிப்படை' இல்லாமையேயாகும். சிறந்ததொரு விஞ்ஞான தொழில் நுட்ப அடிப்படையில்லாமல் எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்தைச் செயல்

## விவசாயப் புலம்

### நீர்வளம் நிறைந்த நாட்டில் உணவுப் பற்றுக் குறையா?

—சிந்தனைச்செல்வன், யாழ்ப்பாணம்—

கடந்த சில வாரங்களாக யாழ்ப்பாணத்தில் மல்லி, மிளகாய் போன்ற பொருட்களுக்கு ஏற்பட்டிருக்கும் பெரும் தட்டுப்பாட்டைப் பற்றிப் பத்திரிகையில் செய்தி வெளிவந்து கொண்டிருக்கின்றன. நாட்டில் உணவு பற்றுக்குறை ஏற்பட்டிருப்பதைப் பார்க்கும் போது, நீர்வளமும், நிலவளமும் நிறைந்த நம் நாட்டிலே, கமத்தொழில், குழிதோண்டிப் புதைக்கப்பட்டு விட்டதா என்ற கேள்விதான் கேட்கத் தோன்றுகின்றது.

தெஹ்ரான் பிரதேசம் எமது இலங்கை நாட்டிலும் பார்க்க நீர்வசதியற்ற ஒரு பிரதேசம். அந்தப் பிரதேசத்தில், மக்களின் விடா முயற்சியும், அந்நியச் செலாவணியை மீதப்படுத்த வேண்டும் என்ற பேராவும், நாட்டில் கமத்தொழிலை ஊக்குவிக்கின்றது.

### பரிதாபகரமான எமது நிலை

தெஹ்ரான் பிரதேசத்திலும் பார்க்க நூற்றுக்கு நூறு வீதம் நீர் வளம் கொண்ட நம் ஈழத்தில், அனாதரவான நிலையில் கிடக்கும் பூமிகளை வளம் படுத்த நம்மவர் முயற்சி எடுக்காதது ஏன்? எந்த ஒரு பொருளுக்கும் அந்நிய நாட்டின் கரங்களை எதிர்பார்த்து பழகிய காரணமா அன்றி எம்மவரிடையே குடி கொண்ட சோம்பேறித் தனமா. கேவலம், கோடிக்கணக்கில் எம் பணம் வெளிநாடுகளுக்கு வாரி இறைக்கப்படுவதைப் பார்த்தும், அப்படி வாரி இறைக்கும் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுவதை நன்குணர்ந்தும், நாம் இன்னமும், வாய்மூடி மௌனிகளாய், உடல் வலுவிருந்தும் சப்பாணிகளாய் வாழுவதை எண்ணும்போது நம்மைப் பற்றி என்ன எண்ண வேண்டியுள்ளது?

### செத்தல் மிளகாய்

இப்போது ஏற்பட்டிருக்கும் மிளகாய் தட்டுப்பாடு, பொதுமக்களை எவ்வித நிலைக்கு ஆளாக்கி விட்டது என்பதை சொல்லாமல் விளங்கும் நம் நாட்டிலே, செத்தல் மிளகாய் சாகுபடிக்கு ஏற்ற நல்ல நிலங்கள் உண்டு. அந்த நிலங்களை வளம் படுத்தி, மிளகாய் சாகுபடி செய்ய எம்மவர் முன்வராத காரணம் தான் இந்த செத்தல் மிளகாய் தட்டுப்பாட்டுக்கு காரணமாகும்.

சென்ற வருடம் ஒரு விவசாயி (தீவுப்பகுதியில்) செத்தல்மிளகாய்சாகுபடிசெய்து மாதம் ஐம்பது இருத்தலுக்கு மேல் பெற்றுள்ளார். இவரைப்போல் ஒவ்வொரு விவசாயியும் மிளகாய் சாகுபடி செய்தால் அந்நிய நாட்டை எதிர்பார்த்து, நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் நிலைமை ஏற்படாது

விளைபொருள் உற்பத்திச் சங்கங்கள், ஒவ்வொரு இடத்திலும் தூங்கிக் கொண்டிருக்கின்றன. அவை விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுத்து அவர்களை விவசாயத்தில் ஈடுபட வைப்பதில்லை. விளை பொருள் உற்பத்திச் சங்கங்கள் மூலம், விவசாயிகளுக்குத் தேவையான உதவிகள் செய்து கொடுக்கப்பட்டு விவசாயிகளை ஊக்குவித்தால் நம் நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுத் தட்டுப்பாடு நீங்கும்.

குறிப்பாக மிளகாய் விதை தற்போது இருத்தல் நாலு ரூபாவாக உயர்ந்திருப்பது விவசாயிகளை பெரும் நஷ்டத்துக்குள்ளாக்குவதற்கு முதற்படி. இம்மிளகாய் விதைகளை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், குறைந்த விலையில் விநியோகம்செய்து மிளகாய் மரங்கள் பருவ நிலையை அடையும் போது அதற்கு வேண்டிய பசளை வகைகளையும் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் விநியோகம் செய்து, விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுப்பதன் மூலம், நம் நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள, மிளகாய்த் தட்டுப்பாடு அடுத்த வருடத்திலும் ஏற்படாமல் செய்யலாம்.

# கல்வித் தராதரம் குறைந்தவர் தரமான பதவி பெறுவதேன்?

## கைலஞ்ச ஊழலே காரணம்

### இத்தீய பழக்கம் ஒழிந்து போகட்டும்

—சில்லையூர் செ. அ. விமலசேகரம்—

மனிதனை மனிதன் சுரண்டி வாழாத ஏற்றத் தாழ்வுகளைக் கற்பித்து ஏய்த்துப்பிழைக்காத சமதர்ம சமுதாயம் நம் நாட்டில் அமையவேண்டுமானால் சமுதாயத்திலுள்ள பல ஊழல்கள் ஒழிக்கப்பட வேண்டும். நாகரிகத்திலும், விஞ்ஞானத்திலும் முன்னேறிக்கொண்டிருக்கும் மக்கள் தங்கள் தங்கள் நாடு முன்னேற்றப் பாதையில் அடி எடுத்து வைக்கவேண்டுமானால் நீதியை நிலைநாட்ட, நேர்மையை வலியுறுத்த, மடமையை மாய்க்க, கொடுமைகளை களையச் சிறுமைகளைச் சீரழியச் செய்ய முன்வரவேண்டும். லஞ்சமென்னும் புற்றுநோய் நாட்டிலிருந்து என்று அகலுகின்றதோ அன்றுதான் நம் நாடு செழிப்படையும்.

இன்று நம் நாட்டிலே தலைவிரித்தாடும் பல முக்கிய ஊழல்களில் கைலஞ்ச ஊழலும் ஒன்றாகும். கைலஞ்ச ஊழலால் நாடும் நாமும் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகிறோம் என்பதை மக்கள் அனைவரும் தினசரிகள் மூலம் அறிந்திருப்பீர்கள். எந்த அரசாங்க இலாகாக்களையும் நன்கு கூர்ந்து நோக்கும் போது அங்கே லஞ்சம் வாங்கும் வழக்கம் இருந்து வருகிறது. உயர் பதவிகளில் இருக்கும் அரசாங்க ஊழியர்களுக்கு அரசாங்கம் போதியளவு வேதனம் கொடுத்தும் அவர்கள் திருப்தியடையாது அன்றாடக்கஞ்சிக்கு வழியின்றித் திண்டாடும்பலஏழைமக்களிடம் கை நீட்டி லஞ்சம் வாங்குகிறார்கள். கல்வி அறிவும் ஆற்றலும் நிரம்பிய திறமையான வாலிபர்கள் வேலையின்றி வாடும் பொழுது, கல்வித் தராதரம் குறைந்த எத்தனையோ இளைஞர்கள் சிறமான உத்தியோகங்களில் கடமையாற்றுகிறார்கள் என்பதை எண்ணும்போது வியப்படையாமல் இருக்க முடியவில்லை. இதற்குக் காரணம் லஞ்சமேயாகும்.

உலகில் பஞ்சமாபாதகங்களாகிய கொலை, களவு போன்ற சமூகத்தைப் பாழ்படுத்தக்கூடிய தீய செயல்களை கூசாமல் செய்பவர்கள் கூட பொலிஸ் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து தாங்கள் நிரபராதிகள் என நிரூபித்து விடுகிறார்கள். இதனால் நாட்டிலே பல நெறி கெட்ட செயல்கள் நடந்து வருகின்றன. குறிப்பாக பொலிஸ் இலாகாக்களிலும், வேலை கொடுக்கும் காரியாலயங்களிலும், உள்ளூராட்சி மன்றங்களிலும், இலங்கைப் போக்குவரத்து அலுவலகங்களிலும், வைத்திய சேவைப் பகுதிகளிலும் லஞ்சம் வாங்கும் வழக்கம் அதிகமாகத் தாண்டவமாடி வருகின்றது.

### சட்டத்தால் தீருமா?

லஞ்ச ஊழல்களைக் கண்காணிக்க அரசாங்கம் பல வித நடவடிக்கைகளைக் கையாண்டு வருகிறது. கைலஞ்சம் வாங்கும் ஊழியர்களுக்குக் கடுமையான சிறைத்தண்டனையும் அபராதமும் வழங்கி வருகிறது. சென்ற கிழமை ஐந்து ரூபா லஞ்சம் வாங்கிய இரண்டு இ. போ. ச. டிக்கெட் பரிசோதக ஊழியர்களுக்கு இரண்டு வருடச் சிறைத் தண்டனையும் 500 ரூபா அபராதமும் வழங்கப்பட்டது இதற்கு ஒரு எடுத்துக் காட்டாகும். இப்படியாக அரசாங்கம் தண்டனை வழங்கியும் லஞ்சம் வாங்குவோர் வாங்கிக்கொண்டேயிருக்கிறார்கள். மக்கள் அரசாங்கம் நடக்கும் நாட்டிலே அரசாங்கத் தாபனங்களெல்லாம் மக்கள்தாபனங்கள் மக்களால் மக்களுக்காக மக்களாட்சி நடைபெறும் நம் நாட்டிலே வேலி பயிரை மேய்வது போல் தங்களுடைய சமுதாயத்தை தாங்களே சுரண்டினால் நாடு முன்னேற முடியாது. சுயநலம் தலைதூக்கும் போது மனிதன் எதையும் செய்ய முன்வருகிறான். சுயநலமே பெரிதென எண்ணும் மனித வர்க்கத்தின் கையில் இன்றைய உலகம் தங்கியிருக்கிறதென்பதை மக்கள் நன்குணரவேண்டும். எங்கள் நாடு என்ற எண்ணத்துடன் ஊழல்களில் உழலாமல் நேர்மையான முறையில் முன்னேறினால் கைலஞ்சம் போன்ற ஊழல்களை அகற்றச் சட்டம் தேவைப்படாது. ஒவ்வொரு மனிதனும் தவறான பாதையில்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதை பந்தாட்டம்

# மத்தியகல்லூரிகோஷ்டி இருபிரிவிலும் வெற்றி

யாழ்ப்பாணம், செவ். யாழ். பாடசாலை விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 2-ம் 3-ம் பிரிவுகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் யாழ். மத்தியகல்லூரியும், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயமும் மோதிக்கொண்டன. இப்போட்டியில் இருபிரிவிலும் நன்றாக ஆடிய யாழ். மத்தியகல்லூரி கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தை அமோக வெற்றியீட்டியது.

முதலில் நடைபெற்ற 3ம் பிரிவுப் போட்டியில் இடைவேளைவரைக்கும் இருசாராரும் விட்டுக்கொடுக்காமல் பலமாகமோதினர். போட்டியும் ரசிப்பாகத்தான் காணப்பட்டது. இதன்பயனாக இடைவேளைக்குமுன் ஒருவரும் கோல்கள் போடவில்லை. இடைவேளைக்குப்பின்னர் மத்திய கல்லூரியின் விளையாட்டில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. சிறந்த 'பாசிங்' செய்து சூட்டோடு சூடாக கோல்களை மின்னல் வேகத்தில் விளாசினர். மொத்தம் 4 கோல்களை மத்திய கல்லூரி அடித்தது இக்கோல்களை முறையே கோபிநாத், கமலநாதன், பிரேமச்சந்திரன், குருநாதன் ஆகிய வீரர்கள் போட்டனர். இப்போட்டி முடிவில் மத்தியகல்லூரி 4-0 கோல்களால் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தை வெற்றியீட்டியது.

## 2 ம் பிரிவிலும் மத்தியகல்லூரி

3-ம் பிரிவுப்போட்டியை அடுத்து நடைபெற்ற 2-ம் பிரிவுப்போட்டி ஆரம்பத்தில் இருந்து முடிவுவரை விறுவிறுப்பாகவே காணப்பட்டது. இருகோஷ்டி வீரர்களும் மோதி ரசிப்பான தொரு போட்டியை ரசிகர்களுக்கு அளித்தனர்.

இடைவேளைக்கு முன்நடந்த போட்டியில் கனகரத்தினம் கோஷ்டியினரே முதலாவது கோலைப்போட்டனர். இதன் எதிரொலியாக மத்தியகல்லூரியும் ஒரு கோல் போட்டது. இதை சண்முகலிங்கம் என்னும் முன்னணி வீரர்விளாசினர். இடைவேளையின் போது இருகோஷ்டியும் தலா ஒவ்வொரு கோல்கள் பெற்றிருந்தன. இடைவேளையின் பின் போட்டி உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. கடைசிக்கட்டத்துக்குக் கட்டம் மத்தியகல்லூரியின் 'பாசிங்' விளையாட்டு பாராட்டக்கூடியது. இம்மோதலின் முடிவில் மத்தியகல்லூரி 2-1 கோல்களால் எதிர்க் கோஷ்டியை வெற்றியீட்டியது. மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போடிகளுக்கு திரு. ரகுநாதன் திரு. சற். சின்கிராயர் ஆகியோர் முறையே மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்.

## சிவாஜி வெற்றி

யாழ்ப்பாணம், செவ். ஏழாலை கிழக்கு சிவாஜி உதைபந்தாட்ட கோஷ்டிக்கும், எம். ஜி. ஆர். உதைபந்தாட்ட கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில், 4-2 கோல்களால் சிவாஜி கோஷ்டி வெற்றிபெற்றது. ஏழாலை ஞானப்பிரகாசம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. அ. ஆனந்தராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## விக்ரோறியா ஆசிரியர் வெற்றி

சுழிபுரம், திங்கள். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியர் கோஷ்டிக்கும் நெல்லியடி மத்திய கல்லூரி ஆசிரியர் கோஷ்டிக்கும் இடையேநடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி கோஷ்டியினர் மூன்று கோல்களைப் போட்டு வெற்றி பெற்றனர், நெல்லியடி மத்திய கல்லூரியினர் கோலெதுவும் போடவில்லை.

## கல்வித்தராதரம்...

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

செல்லாது என்னைப்போல் மற்றவனும் வாழவேண்டும் என்ற சிறந்த போக்குடன் வாழ்ந்தால் சட்டம் என்ற எல்லைக்கோடே தேவையில்லை.


எனவே கைலஞ்சம் கொடுப்பதும் குற்றம், வாங்குவதும் குற்றம் என்பதைக் கற்றறிந்த மக்கள், கைலஞ்சம் வாங்கும் ஒரு சில தரகர்களைத் தண்டிக்கத் தவறக்கூடாது. சட்டத்தை உண்டாக்கிய மக்கள் நாட்டின் ஊழல்களைப் போக்க முன்வந்தால் பல முக்கிய பிரச்சினைகளை [illegible] கலாம்.


## ராணே


தயாரிப்புகள்

ஆஸ்பத்திரி படுக்கைகள்

ரூ. 180/- ரூ: 185/-



குழந்தைகளின் தொட்டில்கள்



ரூ. 220/-

வைத்திய பரிசோதனை படுக்கைகள்



ரூ. 190/-

**த பர்மா டீக் ட்ரேடிங் கம்பெனி லிமிட்டெட்,**

62, புளுமெண்டால் ரோட்

கொழும்பு—13

தொடர்புகொள்ளுங்கள்

தொலைபேசி: 2233/34

கிரும்ஸ்: Teaklog.


# தமிழ்மறைத் தேர்வில் சான்றிதழ் பெறுவோர்

யாழ்ப்பாணம், செவ். தமிழ் மறைக்கழகம் நடத்திய இவ்வருடத்துக்கான அகில இலங்கைத் தமிழ் மறைத்தேர்வில் சான்றிதழ் பெறுவோர் முடிவுகள் வருமாறு:

(முதலாம் பிரிவில் தேறியவர்களுடைய பெயர்களுக்குப்பின் 'மு' குறிப்பு இடப்பட்டுள்ளது.)

மேற்பிரிவு: அக்கரைப்பற்று - வே. தெய்வநாயகம், பருத்தித்துறை - வீ. பரந்தாமன், யாழ்ப்பாணம் - த. தனபூஷணி.

மத்தியபிரிவு: அக்கரைப்பற்று - கே. லட்சுமண பிள்ளை (மு), க. பாக்கியராசா, அளவெட்டி - ஐ சண்முகலிங்கம் (மு). கற்றன் - செ. ஜனார்த்தனன், கி. சோமசேகரம் (மு). இரா. மூத்துசாமி, கோ. முத்துக்கறுப்பன் (மு). கோ. திருப்பதி (மு), கழுவாஞ்சிக்குடி - வி. மன்மதன், தோ. இரசம்மா, சி. மனோன்மணி (மு). சண்டிருப்பாய் - தா செல்வராசா, க தேவராசா (மு). இ. மங்களேஸ்வரி, வி சுகிர்தமலர், ஞானமலர் (மு), ஐ இந்திரசோதி, த சர்வேஸ்வரி, க செல்வமலர் த. குணரத்தினம், கி கணேஸ்வரி, க. திரவியம், மு. சந்திரகுமார். சாவகச்சேரி - க. அருணாசலம் (மு), செ. கணபதிப்பிள்ளை (மு), கு தங்கேஸ்வரி, ப. மகாஈஸ்வரி. வெ. லீலாவதி (மு), பொ லீலாவதி, கு. கனகம்மா (மு). து. தெய்வானை அம்மன், க. தங்கேஸ்வரி (மு). சி நீலாம்பிகை, சி முத்துப்பிள்ளை (மு), சிலம்பம் - செ. தேவமலர், கன்ணகம் - க. அமுதகுமாரி (மு), க. அற்புதவதனி (மு), க இராசலட்சுமி (மு), கு. இராசலட்சுமி (மு). செ இராசேஸ்வரி, ஆ. கண்மணி, சு கமலாவதி, கமீதாகப் பாணிச்சை (மு), க. கலாநிதி (மு, இ கோடீஸ்வரி, சே. கோமளவதி (மு). தி. சந்திரபவானி (மு), சி. சரஸ்வதி (மு), செ சரஸ்வதி (மு), ஐ சரோஜினிதேவி (மு), சி. சாந்தபவானி (மு), சி. சிவராணி (மு), மு. சுபைதா (மு), செ. சுலோசனா (மு), பொ. தவமணி (மு, சி. தனலட்சுமி (மு), மா. தனலட்சுமி, (மு), அ பத்மாவதி, ச பரமேஸ்வரி, (மு), ம புனிதவதி (மு), சோ. மணிமேகலை, ம. மனோகரி (மு), ச ஜெயமணி (மு), சி. யோகேஸ்வரி (மு), செ. லீலாவதி (மு), க. விஜயலட்சுமி (மு), அ. கமலாதேவி (மு), கா. கமலாம்பிகை (மு). துணுக்காய் - கு. மனோன்மணி (மு). கா சிவசோதி, கு. உருக்குமணி (மு), பருத்தித்துறை - சி. கதிர்மகள், குசுதாஸ் இராமதாஸ் (மு), மட்டுவில் - வெள்ளிதேவி (மு), யாழ்ப்பாணம் - இ. கனகரெத்தினம் (மு), வசாவிளான் - க. சுப்பிரமணியம் (மு), வே. தருமராசா, க. சிவபாதம், அ. கமலசேகரம், செ தருமராசா (மு). வ. சத்தியசீலன், க. நடராசா, இ சோதிலிங்கம், மு. நாகரத்தினம், திருக்கோணமலை - செ. நித்தியலட்சுமி, கிளிநொச்சி - க. ரஞ்சிதாதேவி, நா. தனலட்சுமி, ஐ. அன்னலட்சுமி மு. நடனவதி, செ. மேனகாராசமணி, க. தவமணி (மு), இராமநாதபுரம் - இ. இராசலிங்கம் (மு), இ. மருதலிங்கம், த தவமணி, க. யோகாம்பிகை (மு), ந ஆனந்தநாயகி,

கீழ்ப்பிரிவு: அக்கரைப்பற்று - மா. பாக்கியவதி, த மனோன்மணி, நா. கமலேஸ்வரி, இ. நிர்மலாதேவி, செ. திருபைலெட்சுமி (மு) க. சந்திரா (மு), க. பவானி (மு), செ. துளசிமலர், சி. சுசிலா, வி. தனலெட்சுமி, க. லோகநாதன் க சி. லிங்கசாமி, பா. இராமலிங்கம் (மு), இ. சிவஞானம், சி. கனகலிங்கம், மு. குமாரகுலசிங்கம், பொ முத்துலிங்கம் (மு), சி. சகாசிகம் (மு), சோ. தருமலிங்கம் (மு), அளவெட்டி - செ. செல்வபுஸ்பராசரெத்தினம், உடும்பிராய் - கு குலரெத்தினசேகரம் (மு), ந பிரபுதேவன், வை சிவாஜி, கு. குலஞானவதி (மு), ந கமலாதேவி, கற்றன் - க நீலவர்ணன் (மு), ம. கணபதி (மு), து நித்தியானந்தன் (மு) மு பரமானந்தன் (மு), தே. சக்கரவர்த்தி (மு), அ. விஜயலட்சுமி (மு), சாஜெயபாய் (மு), வி. மாக்கிரட் (மு), மு. தேவி (மு), சி. இரட்னமாலா (மு), க. பத்மினி (மு), தெ. இராசேஸ்வரி (மு), அ. விஜயலட்சுமி, க. ஜெயராணி (மு), கொழும்பு - கி. புவனேஸ்வரி (மு), க. பெரும்மாள் திருக்கேஸ்வரன் (மு), சண்டிருப்பாய் - வே. இந்திராணி (மு), சாவகச்சேரி - இ. சசி (மு), சி. சிவானந்தன், க தங்கராசா, ச. பாலச்சந்திரன், ச. பாலசுப்பிரமணியம் (மு), வே. குமாரசமி (மு), ச. இராஜா, ச. இரஞ்சனிதேவி, உ. கோமளவல்லி, பே. சிவஞானவதி, வே லலிதா (மு), பொ. புஸ்பராணி, சி ஜானகிதேவி, சுன்னாகம் - க. இராசாம்பாள், இ. கலாதேவி (மு), பேர். கலைச்செல்வி (மு), வே. கௌரிதேவி. த சந்திராதேவி (மு). அ. சற்குணராணி, வி. சுமித்திரா (மு), செ. செல்வமலர். த. பத்மினி (மு), பா. பாலாம்பிகை (மு), க. மங்களேஸ்வரி (மு), பி. மேரிஇறேன் (மு), க. மேனகா (மு). ச. இந்திராதேவி (மு), சி வசந்தி, வை. வறசலா, (மு) வரலட்சுமி சி. ஜெயமலர், சி. ஜானகி, செ ஜெயந்தா, க. சந்திரலீலா (மு) துணுக்காய் - கு. சிவபாதசுந்தரம் (மு), கி. கமலாவதி, பருத்தித்துறை - கு இராமதாஸ் (மு), கு. ஜெயலட்சுமி (மு), பூனகரி - வே. பாலசுப்பிரமணியம் (மு), ச. கணேசராசா, க பத்மநாதன், செ. செல்லம்மா (மு), நா. சிதம்பரம் (மு), அ. பராசக்தி, ச. கணேசராணி (மு). மட்டக்களப்பு - சோ. வரதராசன் பொ. விசாலாட்சி, செ. தேவகி (மு), க. தங்கவேல், இ. தானியலட்சுமி மட்டுவில் - க. இராசேஸ்[illegible] நிர்மலாதே[illegible] வெ. வேலுச்சா[illegible] லிங்கம், க. மகேந்திரராணி, க தவமணிதேவி, ம. அல்போன்ஸ் ஜெயரெத்தினம், சி அப்பலவாணர் (மு), க. வன்னியசிங்கம், க. இந்திராதேவி, சி. சரஸ்வதி (மு), சி. தவமணி, பொ. நாகேஸ்வரி சு. மணிமேகலை, டோ. மேரிமாக்கிறெட், இராமநாதபுரம் - க. சபாரெத்தினம் (மு) மா. கணபதிப்பிள்ளை, கி. சின்னராசா.

தொடக்கப் பிரிவு: அக்கரைப்பற்று - சா. வள்ளிநாயகி, சி சிறிமாலினி (மு), அளவெட்டி - இ. சிவலோகேஸ்வரி, உரும்பராய் - க. பாரதிதேவி (மு). கு. குணரஞ்சிதவதி (மு), வே நாகபூசனி, மா. தங்கராசா, கற்றன் - சி. வசந்தி (மு), அ. சுந்தரம், கொழும்பு - த. குமாரிகௌரி, இ. விஜயராணி, சுன்னாகம் - இ. நிரஞ்சனி (மு), ச. இராசாம்பிகை (மு), ம கௌரிமணி, சி சிவசக்தி (மு), தே. வசந்தா, ந. லோகநாயகி, ப. ரஜனி, துணுக்காய் - க. லோகநாதன், த. கனகசபை, பூநகரி - ஐ. புஷ்பராணி (மு).

(8-ம் பக்கம் பார்க்க)

## ...ஞ்ஞானமும்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

லது ஒழுங்குமுறைக்கு உரித்தானவையும், கட்டாயமாகச் சன்மானிக்கப்படவேண்டியனவையுமாகும்.

### தொழில்நுட்பம் அவசியம்

விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் அதிவேகமாக வளர்ச்சியடைந்து வருவதால் உற்பத்தி முறைகளில், காலத்துக்குக்காலம் அடிக்கடி மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. எனவே எமது உள்நாட்டுக் கைத்தொழில்கள் விஞ்ஞான தொழில் நுட்ப வல்லுநர்கள் உதவியைப் பெறாத வரையில், மற்றைய நாட்டுப்பொருள்களின் தரத்துடன் ஒப்பிட்டு நோக்கப்படும்போது, இவைகளெல்லாம் விரைவில் வாலைச் சுருட்டிக்கொள்ள நேரிடும். இந்த உண்மை குறிப்பாகச் சமீபகாலங்களில் திருப்தியான அளவு விஞ்ஞான தொழில் நுட்ப விளக்கமோ உதவியோ இல்லாது—உள்நாட்டு நிலைமைகளுக்கு அமையும்படியான உற்பத்தி முறைகள் எதையும் அனுசரிக்காது எழுந்துள்ள ஒருசிலகைத்தொழில்களுக்குப் பொருத்தமானதாம்.

(அடுத்த வாரம் முற்றும்)


## கட்டிட ஒப்பந்தக்காரர்களுக்கு ஓர் நற்செய்தி!

எங்களிடம் குறைந்த செலவில் சிறந்த முறையில் "கட்டிட மேல் கூரை இரும்பு வேலைகள் இரும்பு கேட், கிரில்கள் பைப் பிட்டிங்; வாட்டர்டேங் (நீர்த்தாங்கி) வெல்டிங், வார்ப்புவேலைகள் கூரைசீட் ஆணி முதலியவைகளை உடனுக்குடன் குறிப்பிட்ட தவணைக்குள் செய்து கொடுக்கப்படும்.



ஒருமுறை நேரில் எங்களிடம் தொடர்பு கொண்டு உங்களின் ஆதரவை நல்குமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறோம்

**மகாஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்**

அன் இன்டஸ்றீயல் என்ஜினியரிங் வேக்ஸ்

150 ஸ்ரான்லி ரோட், — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் பெண்ணை பொலிசார் கெடுத்தார்களாம்

## மாமனும் உடந்தையாக இருந்ததாக பொலிஸில் புகார்

கிளிநொச்சி, திங்கள்

இருபது வயது இளம் பெண்ணொருத்தி பொலிஸாரால் பலாத்காரப்படுத்தப்பட்டு, விபரீதமான முறையில் நடாத்தப்பட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது. வைத்திய பரிசோதனையின் பின் இப்பெண்மீது பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டிருப்பது உண்மையெனத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இப்போது யாழ்ப்பாணம் கன்னியர் பாதுகாப்பு மடத்தில் இப்பெண் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உருத்திரபுரம் பத்தாம் வாய்க்காலிலுள்ள குடியேற்றத்திட்டத்தில் வசிக்கும் செல்வி சதாசிவம் செல்வரத்தினம், என்ற இளம் பெண் தன்மீது கிளிநொச்சி பொலிசைச் சேர்ந்த மூவர் பலாத்காரம் புரிந்து தகாத முறையில் நடந்துகொண்டதாக உருத்திரபுரம் கிராம சேவையாளரின் உதவியுடன் கிளிநொச்சிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. என். பொன்னம்பலத்திடம் புகார் செய்தார். கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு இப்பெண் வைத்திய பரிசோதனைக்காக அனுப்பப்பட்டார். பலாத்காரம் உண்மையெனத் தெரிவிக்கப்பட்டது.

செல்வி சதாசிவத்தின் புகாரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நான் 27-10-66 வியாழக்கிழமை இரவு 9-00 மணியளவில் எனது மாமன் எனக்கூறப்படும் பூவிலிங்கம் வீட்டில் இருந்தேன். அச்சமயம் கிளிநொச்சி பொலிசில் கடமைபுரியும் மூவர் வந்தனர். மாமாவும் பொலிசார் மூவரும் கூடி நன்றாக மதுபானம் அருந்தினர். பின் மாமா பொலிஸ் மூவரையும் எனது அறைக்குள் விட்டுக் கதவைப் பூட்டினார். நான் இம்மூவரையும் கண்டு பயந்தும் கூச்சலிட முடியவில்லை. என்னை மூவரும் சேர்ந்து பலாத்காரம் பாவித்து தகாத முறையில் நடந்து கொண்டனர்.

எனது நிலை அந்த நேரம் பெரிதும் சீர்கேடாகவிருந்தது. அதிகாலை 5-30 மணியிருக்கும். மாமா கூடு

(5-ம் பக்கம் பார்க்க)

### தமிழ்மறைத் தேர்தல்...!

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வி. இராஜேஸ்வரி, யாழ்ப்பாணம்-அ. புராந்தகன் (மு), வேலணை- மு. நிர்மலாதேவி, ந. சந்திரவதனி, நா. உரோகினி, இ. புஷ்பமலர், சி. யோகம், சி. சரஸ்வதி, கா. சரோஜினிதேவி, (மு), சி. ஞானசரஸ்வதி (மு), ஆ. உருத்திராதேவி, கிளிநொச்சி- கிறிஸ்தோப்பர், க. [illegible]ராசா, செ பரமநாதன், இ. தனலெட்சுமி (மு), ஆ. பரமேஸ்வரி, இ. ஜெயந்திரராணி (மு). இராமநாதபுரம்- தி. உருபராணி, இ. பிரிந்தா, தி. உரோகினி, ஆ. பரமேஸ்வரி, இ. ஜெயந்திரராணி (மு).


கைத்தறி ஜவுளிகள்

100-ம் நெர், 120 நெர் 6 யார், 7 யார் டிசைன் சேலைகள், பரமாஸ் வேட்டி செற், சருகை வேட்டி செற், குறி வேட்டி, சால்வைகள் பெட்சீற் துவாய், மற்றும் பல ரக தினுசுகளும் எங்களிடம் மலிவாகப் பெறலாம்.

S. R. S.

ஜவுளிமாளிகை

216, K. K. S. வீதி

யாழ்ப்பாணம்.

போன்: 296


### அடுத்த வாரத்தில் ஜீ. ஜீ. வருவார்

யாழ்ப்பாணம், செவ்.

ஐக்கியநாடுகள்சபைக்கு இலங்கை கோஷ்டிக்கு தலைமை தாங்கி சென்ற யாழ்ப்பாண எம். பி. திரு. ஜீ ஜீ. பொன்னம்பலம், நியூயோர்க்கிலிருந்து இம்மாதம் 9-ம் திகதி இலங்கைக்கு புறப்படுவார் எனத் தெரியவருகிறது.

இம்மாதம் 15-ம் திகதி அங்கிருந்து புறப்படுவார் என முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது. ஏற்கனவே குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் திரு. பொன்னம்பலம் இலங்கைக்கு புறப்படுவதற்கு அரசியல் நிலைமை காரணமாக இருக்கலாமெனக் கருதப்படுகிறது.

### சங்கீதக்கச்சேரி

மானிப்பாய், திங்கள்

வருகிற வியாழக்கிழமை மாலை கர்நாடக சங்கீத மேதை டி. கே. ரங்காச்சாரியின் சங்கீதக்கச்சேரி வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் வட இலங்கை சங்கீதசபை ஆதரவில் நடைபெறவிருக்கிறது. இந்நிகழ்ச்சிக்கு வடமாநிலக் கல்வியதிபதி திரு. சி. தணிகாசலம் தலைமை தாங்குவார்.


வட இலங்கை சங்கீதசபை ஆதரவில்

கர்நாடக சங்கீதமேதை

உயர்திரு T. K. ரங்கச்சாரி

அவர்கள்

சங்கீதக் கச்சேரி

சிறந்த பக்கவாத்தியங்களுடன்

வடமாநிலக் கல்வியதிபதி

உயர்திரு சி. தணிகாசலம்

தலைமையின்கீழ் நடைபெறும்.

காலம்: ஐப்பசி 18-ந் திகதி வியாழக்கிழமை

3-11-66 மாலை 6 மணி

இடம்: வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம்

டிக்கட் விபரம்:

1-ம் வகுப்பு ரூ. 10-00, 2-ம் வகுப்பு ரூ. 5-00

3-ம் வகுப்பு ரூ. 3-00, மாணவர்களுக்கு ரூ. 2-00

1350


யாழ். இரத்த சேகரிப்பு வங்கி

# இரத்த தானம் செய்யுமாறு டாக்டர்களுக்கும் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செவ்

"டாக்டர்களே! இரத்தந் தந்து உதவுங்கள்" இந்த வேண்டுகோள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி இரத்த சேகரிப்பு வங்கியிலிருந்து யாழ்ப்பாண மாவட்ட ஆஸ்பத்திரிகளின் உள்ள டாக்டர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த வேண்டுகோள், பொலிஸாருக்கும், இராணுவத்தினருக்கும், சிறைச்சாலைப்பகுதிக்கும் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் உள்ள இரத்தவங்கியில் இரத்தத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதிகமாகப் பாவிக்கப்படும் 'பி', 'கியூ' பிரிவு இரத்தத்திற்குபெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் பலஉயிர்கள் ஊசலாடிக்கொண்டிருக்கும் நிலையிலிருப்பதாக அறியப்படுகிறது. இரத்தவங்கி அதிகாரிகள், பாடசாலைகள் மூலமும் வானொலிமூலமும், பொது மக்களிடமும் இரத்தம் சேகரிப்பதாக கடந்தசில மாதங்களாக செய்துவந்தபலவிதப்பட்ட பிரசாரங்களினாலும் சேகரித்தஇரத்தம் மிகக் குறைவானதே எனத்தெரிகிறது.

நோயாளிகளின் சொந்தக்காரர்கள் தேவையான இரத்தம் கொடுக்க முன்வராததினாலேயே, இரத்த வங்கியில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக, ஆஸ்பத்திரியைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் கூடுதலான இரத்தம் நோயாளிகளுக்கு பயன்படுத்தப்படுவதாகவும் அவர்கூறினார்.

ஆபத்தான நிலையில், ஒரு நோயாளி 14ம் வாட்டில் நேற்றுமுன்தினம் அனுமதிக்கப்பட்டதாகவும், அவருக்கு இரத்தம் கொடுக்கும்படி, டாக்டர் அவரதுமைத்துனரிடம் கேட்டபோது அவர்மறுத்துவிட்டதாகவும் அறியப்படுகிறது. அந்தநோயாளி நேற்றுமாலை மரணமானதாகத் தெரியவருகிறது.

# சத்திர சிகிச்சை நிலையத்தில் இயந்திரக் கோளாறு

## கருவிகள் அனுராதபுரத்தில சுத்திகரிப்பு

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலுள்ள சத்திரசிகிச்சை நிலயத்தில் ஆயுதங்களை அவித்து சுத்தம்செய்யும் இயந்திரம் பழுதடைந்துவிட்டதால் சத்திரசிகிச்சை கருவிகள் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டு, அங்கு சுத்தம் செய்து, மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படுகிறது.

அவசரமாக செய்யவேண்டிய சத்திர சிகிச்சைகள் தவிர, மற்றவை இதனால் தாமதிக்கப்படுகிறது. இதன் காரணமாக நோயாளிகள் அதிகநாட்கள் வார்ட்டில் இருப்பதோடு, பல கஷ்டத்திற்குள்ளாகின்றனர்.

இக் குறைகளை நீக்க நடவடிக்கை எடுக்கும்படி, தற்போது பத்தாம் வார்ட்டில் சிகிச்சை பெற்றுவரும் ஊர்காவற்றுறை எம். பி. திரு. வீ. நவரத்தினம் சுகாதார மந்திரிக்கு தந்தி அனுப்பியுள்ளார்.

# குருநகர் வீட்டுத் திட்டம் பற்றி விரிவான ஆலோசனை

யாழ்ப்பாணம், செவ்

குருநகர் வீட்டுத் திட்டம் பற்றி மிகவும் நீண்டநேரம் யாழ்ப்பாண மாநகரசபை விசேஷ கமிஷனர்களின் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அப்பொழுது குருநகர் வீடுகளில் அறவிடும் வாடகை எவ்வளவு குறைவாக அறவிடலாமென்பது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

ஸ்தலஸ்தாபனக் கமிஷனர் பெரினண்டோ தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், குருநகர் வீட்டு வாடகை பற்றியும், வாடகைகளைத் தவணைப் பணமாகக் கொடுத்துச் சொந்தமாக்குவது பற்றியும், மற்றோர் திட்டம் உருவாக்குவது பற்றியும், வீட்டுத் திட்டத்தை ஆராய்ந்து மகஜர் சமர்ப்பிக்கும்படி ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவில் திருவாளர்கள் என். நடேசன், எஸ் சி. மாணிக்கவாசகர், மாநகர சபைக் கமிஷனர் திரு. ஹட்சன் செல்வராசா ஆகியோர் உள்ளனர்.

உத்தரவில்லாமல் வீதிகளின் அருகில் குடிசைகள் கட்ட அனுமதிக்கக்கூடாதெனச் சுகாதார அதிகாரிக்கு அறிவிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கழிவுப்பொருட்களை எப்படிப் பயன்படுத்தலாமென்பதுபற்றி ஆராயும்படி பொதுச் சுகாதார என்ஜினியரிடம் தெரிவிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மின்சார என்ஜினியரால் [illegible] சமர்ப்பிக்கப்பட்ட மகஜரை திரு. நடேசன் ஆராயவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

### இரு வார அவகாசம்

யாழ்ப்பாணம், செவ்

இணுவில் ஆஸ்பத்திரியில் வேலைநீக்கம் செய்யப்பட்ட மூவருக்கு மீண்டும் வேலை வழங்குவது பற்றித் தீர்மானிப்பதற்கு ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் மேலும் இருவார அவகாசம் கேட்டுள்ளனர்.

ஆஸ்பத்திரி ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்ட இம்மூவரையும் வேலைக்கமர்த்துவது பற்றி நேற்று தீர்மானிப்பதாக ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் ஏற்கனவே தெரிவித்திருந்தனர்.

### மாணவி மரணம்

திருநெல்வேலி, செவ்

பதினேழு வயது நிரம்பிய மாணவி புஷ்பராணி நச்சுத்திராவகம் அருந்தி நேற்று மரணமானார். உடனடியாக இவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பொழுதிலும் அவரது உயிர் பிரிந்துவிட்டது.

யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரியில் சிரேஷ்ட வகுப்பில் பயிலும் இம்மாணவியின் தந்தையான கனகரத்தினம் அனுராதபுரத்தில் கடமையாற்றுகிறார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. க. சேனாதிராசா முன்னிலையில் மரணவிசாரணை நடைபெறுகிறது.

### நியமனப் பத்திரம்

யாழ்ப்பாணம், செவ்

சாவகச்சேரி நகரசபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் சாவகச்சேரி நகரசபையில், இன்றுகாலை 10- மணிக்கும், 11- மணிக்குமிடையில் தேர்தல் அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படும்.

### யாருடையது?

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவில் மூன்று கூப்பன்களை பி. ஜெகநாதன் என்பவர் கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர்கள் தகுந்த அத்தாட்சியுடன் பெற்றுக்கொள்ளலாம்.

### தீயில் வெந்து இளம்பெண் மரணம்

திருநெல்வேலி, செவ்

டாக்ஸி சாரதியொருவரின் 20 வயதுடைய இளம் மனைவி உடலிலேற்பட்ட எரிகாயங்களினால் மரணமானார்.

ஆரியகுளத்தைச் சேர்ந்த சரஸ்வதி என்ற மேற்படி இளம்பெண் தமது வீட்டில் எரிந்துகொண்டிருந்த கை விளக்கு தற்செயலாகத் தட்டுப்பட்டதனால் அவரது உடலில் தீப்பற்றிக் கொண்டதாகவும் எரிகாயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார் எனவும் அறிவிக்கப்பட்டது.

### காணவில்லை

29-10 66 சாவகச்சேரி-யாழ்ப்பாண பஸ்பிரயாணத்தில் போது காகின்ஸ்கம்பனி லெதர் கேஸுடன்கூடிய ஒரு மூக்குக்கண்ணாடி தவறிவிட்டது. கண்டெடுத்தோர் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். 20 ரூபா சன்மானமாக வழங்கப்படும். 1467


கைத்தறி நெசவாளர்களுக்கு ஓர் அறிவித்தல்

தங்கள் தறிகளில் உற்பத்தியாகும் எந்த விதமான ஜவுளிகளையும், பெறுமதியான விலைகளில் எம்மிடம் விற்பனைசெய்யலாம. தொடர்புகொள்க.

S R S.

ஜவுளிமாளிகை

சி. இ செல்லத்துரை

216, K. K S வீதி,

யாழ்ப்பாணம்.

போன்: 296

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


### மரண அறிவித்தல்

டாக்ஸி சாரதி இராமநாதன் சேதுராசாவின் அருமை மனைவி சரஸ்வதி காலமானார். இவர் பலாங்கொடையைச் சேர்ந்த மயில்வாகனத்தின் மகளும், யாழ். ஆஸ்பத்திரியைச் சேர்ந்த திருமதி அருமைசிறில் பாக்கியலட்சுமி, மயில்வாகனம் அமராவதி ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று பகல் 2 மணிக்கு 64/2, புகையிரத நிலைய ஒழுங்கையிலிருந்து கல்லூண்டி மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். நண்பர்களும் உறவினர்களும் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்க.

—தகவல்: சேதுராசா.

1153

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல்வீதி, 62-ல் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org